
# ஸ்ரீ கிருஷ்ண தரிசனம்

மலர் 2, இதழ் 3 மே / ஜுன் 2010

கிருஷ்ணரின் தொண்டிற்காக பரிந்துரைக்கப்படும் நன்கொடை ரூ. 15




**3**
நாஸ்திகனுக்கும் பக்தனுக்கும் இடையிலான போராட்டம்




**7**
பசுத்தோல் போர்த்திய புலிகள்




**12**
அசுரர்களின் எதிரி; பக்தர்களின் பாதுகாவலர்



**18**
உண்மையான அழகு



**20**
சாதுசங்கம்



**23**
பக்தனுக்கும் மற்றவர்களுக்கும் உள்ள வேறுபாடு

2 ஸ்ரீ கிருஷ்ண தரிசனம்--சந்தா விபரம்

26 வாழ்வை மாற்றிய பகவத் கீதை

27 ஸ்ரீமத் பாகவதம்

31 இஸ்கான்--ஓர் அறிமுகம்

31 கௌடிய வைஷ்ணவ நாள்காட்டி

32 தமிழகத்திலுள்ள இஸ்கான் கோவில்கள்



# ஸ்ரீ கிருஷ்ண தரிசனம்

**ஹரே கிருஷ்ண இயக்கத்தின் பத்திரிகை**

ஸ்ரீ ஸ்ரீமத் பக்திசித்தாந்த சரஸ்வதி தாகூர் அவர்களின் கட்டளையின்படி தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர், 1944ல் Back to Godhead என்ற பெயரில் ஓர் ஆங்கில பத்திரிகையை தொடங்கினார், அஃது இன்று வரை அவரைப் பின்பற்றுபவர்களால் நடத்தப்பட்டு வருகிறது. அப்பத்திரிகைக்கு அவரளித்த வழிகாட்டுதலைப் பின்பற்றி தமிழில் வெளிவருவதே *ஸ்ரீ கிருஷ்ண தரிசனம்*.


**பதிப்பாசிரியர்:** விஜய குமார் (விஜய கோவிந்த தாஸ்)

**தொகுப்பாசிரியர்:** ஸ்ரீ கிரிதாரி தாஸ்

**பிழைத் திருத்தம்:** கேசவ பலராம தாஸ், சனக குமார தாஸ், பிரியதர்ஷினி ராதா தேவி தாஸி, மதன கோபால தாஸ், மாதவானந்த தாஸ், ராதா மதுராபதி தாஸ், ஜெய கிருஷ்ண தாஸ், ஜெய கோவிந்தராம தாஸ்

**வடிவமைப்பு:** ஸ்ரீ கிரிதாரி தாஸ்

**அலுவலக உதவி:** சுபாத்ம கௌரங்க தாஸ்

**தட்டச்சு உதவி:** விசித்ரா

**வெளியிடுவோர்:** பக்திவேதாந்த புத்தக அறக்கட்டளை, சென்னை.

**பதிவு அலுவலகம்:** மனை எண் 9-10, செந்தில் அவென்யூ, காமராஜபுரம், செம்பாக்கம், சென்னை - 600073.
போன்: (044) 22272920

**செயல் அலுவலகம்:** 7C, வாசன் தெரு, பெரம்பூர், சென்னை - 600 011. போன்: (044) 25514553, 98948 14553

**மின்னஞ்சல்:** btgtamil@pamho.net

**அச்சிட்டோர்:** MWN பிரஸ், சென்னை.



**பதிப்புரிமை** © 2010, பக்திவேதாந்த புத்தக அறக்கட்டளை. அனைத்து உரிமைகளும் பதிப்பகத்தாருக்கு மட்டுமே.


பக்திவேதாந்த புத்தக
அறக்கட்டளை

# ஸ்ரீ கிருஷ்ண தரிசனம்

## தங்கள் இல்லம் தேடி...



ஸ்ரீ கிருஷ்ண தரிசனத்திற்கு பேராதரவளித்து வளர்ச்சி காண உதவியிருக்கும் ஆயிரக்கணக்கான ஆன்மீக அன்பர்களின் விருப்பத்தின்படி, ஹரே கிருஷ்ண இயக்கத்தின் புகழ் மிக்க இப்பத்திரிகை தற்போது மாத இதழாக உருவெடுக்க இருப்பதை பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கிறோம். வரும் ஜூலை மாதம் முதல் ஸ்ரீ கிருஷ்ண தரிசனம் ஆன்மீக அன்பர்களின் திருக்கரங்களை மாதந்தோறும் வந்தடையும். இதற்கு மேலும் வசதி செய்வதற்காக சந்தா முறைகளையும் அறிமுகப்படுத்துகிறோம்.

தங்களுக்கு அருகில் இருக்கும் இஸ்கான் கோவிலை உடனடியாக அணுகி சந்தாதாரராக மாறுங்கள். தங்களது இருப்பிடத்திற்கு அருகில் இஸ்கான் கோவில் இல்லையெனில், எமது சந்தா அலுவலகத்திற்கு (கீழே கொடுக்கப்பட்டிருக்கும் முகவரிக்கு) இப்பத்திரிகையின் இறுதியில் கொடுக்கப்பட்டிருக்கும் சந்தா படிவத்தைப் பூர்த்தி செய்து, சந்தாவிற்குரிய தொகையை வரைவோலை (Demand Draft [DD]) மூலமாக "Bhaktivedanta Book Trust" என்னும் பெயரில் அனுப்பி வைக்கவும். at par காசோலைகள் (cheque) ஏற்கப்படும், ஆனால் வெளியூர் காசோலைகள் ஏற்கப்பட மாட்டாது.

உங்கள் இல்லம் தேடி வரும் *ஸ்ரீ கிருஷ்ண தரிசனம்* படியுங்கள்! ஸ்ரீ கிருஷ்ணரின் தரிசனத்தை அடையுங்கள்!

### சந்தா தொகை

| | |
|---|---|
| ஒரு வருடம்: | ரூ. 160 |
| இரண்டு வருடம்: | ரூ. 300 |
| ஐந்து வருடம்: | ரூ. 700 |

### அனுப்ப வேண்டிய முகவரி

ஸ்ரீ கிருஷ்ண தரிசனம்,
7C, வாசன் தெரு,
பெரம்பூர், சென்னை - 600011.
போன்: (044) 25514553,
91596 39306

### கேள்விகளும் கருத்துகளும்

ஸ்ரீ கிருஷ்ண தரிசனம் குறித்த தங்களது கருத்துகளை எங்களுக்குத் தெரிவிக்கவும், சந்தா குறித்து தங்களுக்கு ஏதேனும் சந்தேகங்கள் இருந்தால் தெளிவுபெறவும் மேற்குறிப்பிட்டுள்ள முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

### எமது குறிக்கோள்

- உண்மை, போலி; ஆன்மீகம், பௌதிகம்; நிரந்தரமானவை, தற்காலிகமானவை—ஆகியவற்றைப் பிரித்துப் பார்க்கும் அறிவொளியை மக்களுக்கு வழங்குதல்
- ஜட வாழ்வின் தவறுகளை பகிரங்கப்படுத்துதல்
- ஆன்மீக வாழ்வின் வேத நுணுக்கங்களில் மக்களை வழிகாட்டுதல்
- வேதப் பண்பாட்டைப் பாதுகாத்து அதனைப் பரப்புதல்
- பகவான் ஸ்ரீ சைதன்ய மஹாபிரபுவினால் வழங்கப்பட்ட இறைவனின் திருநாம உச்சாடனத்தைப் பரப்புதல்
- முழுமுதற் கடவுளான ஸ்ரீ கிருஷ்ணரை நினைப்பதற்கும் அவருக்குத் தொண்டு செய்வதற்கும் உதவி செய்தல்



# நாஸ்திகனுக்கும் பக்தனுக்கும் இடையிலான போராட்டம்



**வழங்கியவர்: தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர்**

*நரசிம்ம சதுர்தசி என்று அறியப்படும் நரசிம்மர் தோன்றிய நன்னாளில், அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் ஸ்தாபக ஆச்சாரியரான ஸ்ரீல பிரபுபாதரால், மே 5, 1974ல், மும்பை நகரில் வழங்கப்பட்ட உபன்யாஸம்.*

பகவான் நரசிம்மர் தோன்றிய தினத்தை நரசிம்ம சதுர்தசி என்று அழைப்பர். நரசிம்மருக்கும் ஹிரண்ய கசிபுவிற்கும் இடையில் நடைபெற்ற போர், ஆஸ்திகத்திற்கும் நாஸ்திகத்திற்கும் இடையிலான போராட்டமாகும். இத்தகு போராட்டம் எப்போதுமே உண்டு. ஒருவர் கடவுளிடம் பக்தி கொள்ளத் தொடங்கினால், அதாவது கிருஷ்ண உணர்வுடையவராக மாறினால், அவருக்கு பல எதிரிகள் தோன்றுவர். ஏனெனில், இவ்வுலகம் அசுரர்களால் நிரம்பியுள்ளது.

## கிருஷ்ணரையும் கொல்ல முயற்சிப்பர்

பக்தர்கள் மட்டுமல்ல, பகவான் கிருஷ்ணர் இப்பூவுலகில் தோன்றிய போதும், அவர் பல அசுரர்களை வதம் செய்ய வேண்டியிருந்தது. கிருஷ்ணரின் தாய் மாமனான கம்சன், கிருஷ்ணரைக் கொல்ல நினைத்தான். தனது தங்கை தேவகிக்குப் பிறந்த எல்லா குழந்தைகளையும் அவன் கொன்றான்; ஏனெனில், கிருஷ்ணர் எப்போது வருவார் என்பதை அவன் அறியவில்லை. தேவகியின் எட்டாவது குழந்தையே கம்சனைக் கொல்லும் என்பது அசரீரியின் வாக்கு, இருப்பினும் கம்சன் எல்லாக் குழந்தைகளையும் கொன்றான். ஆனால் கிருஷ்ணரைக் கொல்ல முடியவில்லை. இறுதியில் கிருஷ்ணர் அவனைக் கொன்றுவிட்டார். யாராலும் கிருஷ்ணரைக் கொல்ல முடியாது. அசுரர்களும் நாஸ்திகர்களும் கிருஷ்ணரைக் கொல்ல முயல்கின்றனர். உண்மையில் கடவுள் ஒருபோதும் கொல்லப்படுவதில்லை. மாறாக அசுரர்களே கொல்லப்படுகின்றனர். அதுவே இயற்கையின் நியதி.



## மரண வடிவில் இறைவனைக் காணுதல்

பிரகலாதரின் சரிதத்திலிருந்து இதனை நாம் புரிந்து கொள்ளலாம். பகவத் கீதையும் (10.34) இதையே கூறுகிறது. *ம்ருத்யு: ஸர்வ-ஹரஷ் சாஹம்:* "உம்மிடம் இருக்கும் அனைத்தையும் மரணத்தின் உருவில் தோன்றி பறித்துக் கொள்ளப்போவது நானே" என்று கிருஷ்ணர் அங்கே கூறுகிறார். பௌதிக சொத்துக்களினால் நாம் மிகவும் பெருமைபட்டுக் கொண்டுள்ளோம். ஆனால் கிருஷ்ணர் (மரணத்தின் உருவில்) வரும்போது, அவையனைத்தும் மறைந்துவிடும். பிரகலாதரும் நரசிம்மரைக் கண்டார், அவரது தந்தையான ஹிரண்யகசிபுவும் நரசிம்மரைக் கண்டார். ஆனால் ஒருவர் பக்தியுடன் இறைவனாகக் காண, மற்ற வரோ பயத்துடன் மரணமாகக் கண்டார்.

## ஹிரண்யகசிபுவும் பிரகலாதரும்


பௌதிகவாதிகளையும் விஞ்ஞானி களையும் போல ஹிரண்யகசிபு மிகவும் புத்திசாலியாக இருந்தான். தங்களது புத்தியை உபயோகித்து அவர்கள் பல்வேறு பொருள்களை உற்பத்தி செய்கின்றனர். எதற்காக? நீண்ட காலம் வாழ்ந்து மேன்மேலும் புலனுகர்ச்சியில் ஈடுபடலாம்



என்பதற்காகவே. இதுவே நாஸ்திக நாகரிகத்தின் முன்னேற்றம். ஹிரண்யகசிபு ஒரு சிறந்த பௌதிகவாதி. ஹிரண்ய என்றால் தங்கம் என்றும்; கசிபு என்றால் பஞ்சணை என்றும் பொருள்படும். இவ்வாறு ஹிரண்ய கசிபுவைப் போன்ற பௌதிகவாதிகள் தங்கத்தின் மீதும் பாலுறவின் மீதும் மிகுந்த பற்றுடையவர்களாக உள்ளனர். பிரகலாத என்றால், *ப்ரக்ருஷ்ட- ரூபேன ஆஹ்லாத*. ஆஹ்லாத என்றால் தெய்வீக ஆனந்தம். தெய்வீக ஆனந்தமுடையவர் என்பதே பிரகலாதர் என்பதன் பொருள். அனைத்து உயிர்வாழிகளும் தங்களது உண்மை நிலையில் அத்தகு ஆனந்தத்தை அனுபவிக்க வேண்டியவர்கள். ஆனால் பௌதிக சங்கத்தினால் நாம் துன்பப்படுகின்றோம்.

## சாகாவரம் சாத்தியமா?

சாகாவரம் வேண்டிய ஹிரண்யகசிபு கடுந்தவத்தை மேற்கொண்டான். அவனது தவத்தின் கடுமையான தன்மையினால் பிரபஞ்சமே நடுங்கியது. அவனை சாந்தப்படுத்த பிரம்மதேவர் தோன்றி, "என்ன வரம் வேண்டும்?" என்று கேட்க, "சாகாவரம் வேண்டும்" என்றான். நீண்ட ஆயுள் கொண்ட பிரம்மதேவராலும் அவ்வரத்தை அளிக்க முடியவில்லை. பிரம்மதேவரின் ஆயுள் பகவத் கீதையில் (8.17), *ஸஹஸ்ர-யுக-பர்யந்தம் அர்ஹத் யத் ப்ரஹ்மனோ விது:* என்று கூறப்படுகிறது. சத்ய, திரேதா, துவாபர, கலி ஆகிய நான்கு யுகங்கள் சுமாராக நாற்பத்து மூன்று இலட்சம் வருடங்களாகும். இந்த நாற்பத்து மூன்று இலட்சத்தை ஆயிரத்தால் பெருக்கினால் அதுவே பிரம்மாவின் ஒரு பகல், அதாவது அவரது பன்னிரண்டு மணி நேரம். இவ்வாறு நமது கணக்கில் பல கோடி வருடங்களை தன் வாழ்நாளாக கொண்ட பிரம்மதேவருக்கும் இறப்பு உண்டு.



*ஜன்ம-ம்ருத்யு-ஜரா-வ்யாதி து:க-தோஷானு தர்ஷனம்* (பகவத் கீதை 13.9). அதாவது, பிரம்ம லோகம் முதல் பாதாள லோகம் வரை எங்கு சென்றாலும், அங்கும் இறப்பு உண்டு. பிறப்பு, இறப்பு, முதுமை, நோய் ஆகிய நான்குமே முக்கியமான பிரச்சனைகள் என்று பகவான் கிருஷ்ணர் பகவத் கீதையில் கூறுகிறார். ஆனால் ஹிரண்யகசிபு பௌதிகமான வழிகளில் இந்த பிரச்சனைகளுக்கு தீர்வு காண எண்ணினான். ஆனால் அஃது இயலாத காரியமாயிற்றே.

## பக்தன் என்றும் அழிவதில்லை

எப்போதும் அடக்கத்துடன் இருக்கும் பகவானின் நித்திய பக்தர்களுக்கு ஒருபோதும் ஆபத்து இல்லை. பகவத் கீதையில் (9.31) பகவான் கிருஷ்ணர், *கௌந்தேய ப்ரதிஜானீஹி ந மே பக்த: ப்ரணஷ்யதி*, "குந்தியின் மகனே, எனது பக்தன் என்றும் அழிவதில்லை என்பதை தைரியமாக அறிவிப்பாயாக," என்று கூறுகிறார். மேலும், தன்னிடம் சரணடையும் பக்தர்களை எல்லா பாவத்திலிருந்தும் விடுவித்து முக்தியளிப்பதாக கிருஷ்ணர் கூறுகிறார். *அஹம் த்வாம் ஸர்வ-பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மா ஷுச:* (பகவத் கீதை 18.66). இவையே பகவானின் உத்திரவாதம்.

ஆனால் ஹிரண்யகசிபுவைப் போன்ற நாஸ்திக வாதிகளுக்கு இவை புரிவதில்லை, அவர்கள் எப்போதும் பகவானுக்கு எதிராக சவால்விடுகின்றனர். இங்கு தந்தைக்கும் மகனுக்கும் உள்ள சச்சரவு என்னவெனில், மகன் கிருஷ்ணரை நம்பும் ஆஸ்திகன்; தந்தையோ நாஸ்திகர் என்பதுதான். இறப்பின் வடிவிலே கடவுள்யார்என்பதை ஹிரண்யகசிபு பார்த்த போது, அவனால் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள முடியவில்லை. இதுவே ஆஸ்திகவாதிக்கும் நாஸ்திகவாதிக்கும் உள்ள வேறுபாடு. நாஸ்திகர்கள், "கடவுள் எங்கே? கடவுளைக் காட்ட முடியுமா?" என எப்போதும் சவால் விடுகின்றனர். "ஆமாம், கடவுளைப் பார்க்கலாம். ஆனால் தற்போது இல்லை. உங்களுடைய பாவ காரியங்கள் முதிர்ச்சியடைந்ததும், இறக்கும் தருவாயில் நீங்கள் அவரைக் காணலாம்." இதுவே பிரகலாதரின் இந்த சரிதம் நமக்குப் புகட்டும் போதனை.

## மஹாஜனங்களில் ஒருவரான பிரகலாதர்

பிரகலாதர் நமக்கு குருவாக செயல்படுபவரில் ஒருவர்.

> ஸ்வயம்புர் நாரத: ஷம்பு:
> கௌமார: கபிலோ மனு:
> பிரஹ்லாதோ ஜனகோ பீஷ்மோ
> பலிர் வையாஸகிர் வயம்
>
> (ஸ்ரீமத் பாகவதம் 6.3.20)

பிரம்மதேவர், நாரதர், சிவபெருமான், குமாரர்கள், கபிலர், மனு, பிரகலாதர், ஜனகர், பீஷ்மர், பலி சக்ரவர்த்தி, சுகதேவ கோஸ்வாமி,



எம தர்மராஜர் என பன்னிரண்டு மஹாஜனங்கள் உள்ளனர். ஆன்மீக வாழ்வில் முன்னேற விரும்புவோர் இவர்களைப் பின்பற்றுவது அவசியம் என்று சாஸ்திரங்களில் கூறப்பட்டுள்ளது. பல்வேறு சாஸ்திரங்களும் பலதரப்பட்ட தத்துவவாதிகளும் இருப்பதால், வாழ்வின் இலக்கை அடைய எந்த வழியை தேர்ந்தெடுப்பது என்பதை நம்மால் சுயமாக அறிந்துகொள்ள முடியாது. இத்தகு சூழ்நிலையில், உண்மையான பாதையை அடைவது எப்படி? மஹாஜனோ யேன கத: ஸ பந்தா, மஹாஜனங்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றி நடப்பதே வாழ்வின் இலக்கை அடைவதற்கான வழி என்று சாஸ்திரங்களில் கூறப்பட்டுள்ளது. பிரகலாதர் அத்தகு மஹாஜனங்களில் ஒருவர் என்பதால் அவரைப் பின்பற்றுதல் அவசியம்.

## இருண்ட பாழுங்கிணறு

அசுர குலத்தில் தோன்றிய பிரகலாதரிடம், மன்னனான ஹிரண்யகசிபு ஒருமுறை, "நீ கற்றறிந்தவற்றில் சிறந்தவற்றை எனக்குக் கூறுவாயாக" என்று கேட்க, பிரகலாதர் பின்வருமாறு பதிலளித்தார்,

*தத் ஸாது மன்யே (அ)ஸுர-வர்ய தேஹினாம்*
*ஸதா ஸமுத்விக்ன-தியாம் அஸத்-க்ரஹாத்*
*ஹித்வாத்ம-பாதம் க்ருஹம் அந்த-கூபம்*
*வனம் கதோ யத் தரிம் ஆஸ்ரயேத*

"இருண்ட பாழுங்கிணற்றைப் போன்ற தற்காலிக குடும்ப வாழ்வையும் தற்காலிக உடலையும் எவனொருவன் ஏற்றுக் கொண்டுள்ளானோ, அவன் துன்பத்தில் மூழ்குவது உறுதி. அத்தகு நிலையை விட்டுவிட்டு வனத்திற்குச் (விருந்தாவனத்திற்குச்) சென்று முழுமுதற் கடவுளிடம் தஞ்சமடைய வேண்டும். இதுவே சிறந்த வழிமுறை." (ஸ்ரீமத் பாகவதம் 7.5.5)

## க்ருஷ்ணரை என்றும் மறவாத பிரகலாதர்

இதைக் கேட்டதும் ஹிரண்ய கசிபுவிற்கு கடுங்கோபம் வந்தது, நாஸ்திகரும் ஆஸ்திகரும் ஒருபோதும் ஒத்துப்போவதில்லை. அதே சமயம் ஆஸ்திகர்கள் அடிபணிவதும் இல்லை. அடிபணியாத பிரகலாதர் தனது தந்தையால் பல இன்னல்களுக்கு உட்படுத்தப்பட்டார். ஆனால், ஓம் நமோ பகவதே வாசுதேவாய என்னும் மந்திர ஜெபத்தை அவர் ஒருபோதும் நிறுத்தவில்லை. கிருஷ்ணரை அவர் ஒருபோதும் மறக்கவில்லை. மிகவும் அபாயகரமான சூழ்நிலையில் கூட கிருஷ்ணரை மறக்கக் கூடாது என்பதை நாம் இதிலிருந்து கற்றுக் கொள்ள வேண்டும். அப்போது கிருஷ்ணர் நம்மைப் பாதுகாப்பார்.



## கருணையே உருவான பிரகலாதர்




கிருஷ்ண உணர்வு ஆனந்தமயமானது. ஒருவர் கிருஷ்ண உணர்வைப் பெற்ற பின்னர், இதர இலாபத்தையோ ஆதாயத்தையோ எதிர்பார்ப்பது இல்லை. இது வேண்டும், அது வேண்டும், என்று நாம் ஒன்றன் பின் ஒன்றாக ஆசைப்பட்டுக் கொண்டிருக்கிறோம். ஆனால் கிருஷ்ண உணர்வைப் பெற்றவன் திருப்தியுடன் உள்ளான். என்ன வரம் வேண்டுமானாலும் கேள் என்று நரசிம்மர் பிரகலாதரிடம் உரைத்தபோது, அவர் தனக்காக எதையுமே வேண்டவில்லை. அதுவே சிறந்த வைஷ்ணவரின் அடையாளம். அவரது தந்தையால் பல தொல்லைகளுக்கு உட்படுத்தப்பட்டபோதிலும், பிரகலாதர், தன் தந்தைக்கு முக்தியளிக்குமாறு நரசிம்மரிடம் வேண்டினார். தனக்காக அவர் எதையும் கேட்கவில்லை. உடனே நரசிம்மதேவர், "உன் தந்தைக்கு மட்டுமின்றி பதினான்கு தலைமுறைக்கும் முக்தியளிக்கிறேன்" என்று உறுதியளித்தார். பிரகலாதரைப் போன்ற ஒரு மகன் அக்குலத்தில் தோன்றியதால் அனைவரும் முக்தி பெற்றனர். இவ்வாறு குடும்பத்திலுள்ள ஒரு மகன் தூய வைஷ்ணவரானால், அவர் பதினான்கு தலைமுறையினரை முக்தி பெறச் செய்கிறார். நம்மால் நமது குடும்பத்திற்கும் நாட்டிற்கும் பௌதிகமாக என்ன செய்துவிட முடியும்? ஆனால் நாம் பக்தரானால், குடும்பத்திற்கும் நாட்டிற்கும் மட்டுமின்றி, மனித சமுதாயம் முழுவதற்கும் நாம் சிறந்த சேவையை அளிக்க இயலும்.

## நீங்களும் கிருஷ்ண பக்தராகலாம்

நமது தத்துவம் இதுவே. எங்களது அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கம் இதைத்தான் பிரச்சாரம் செய்கிறது. கிருஷ்ண உணர்வு உள்ளவராகி, வாழ்வைப் பூரணமாக்குங்கள், இந்த வழிமுறை மிகவும் எளிது,





பன்னிரண்டு மஹாஜனங்கள் (இடமிருந்து வலமாக):
பிரம்மதேவர், நாரதர், சிவபெருமான், குமாரர்கள், கபிலர், மனு,
பிரகலாதர், ஜனகர், பீஷ்மர், பலி, சுகதேவர், எம தர்மராஜர்

இதில் இரகசியம் ஏதுமில்லை. ஹரே கிருஷ்ண, ஹரே கிருஷ்ண, கிருஷ்ண கிருஷ்ண, ஹரே ஹரே/ ஹரே ராம, ஹரே ராம, ராம ராம, ஹரே ஹரே என்பதுதான் எங்களது மந்திரம். இஃது இரகசிய மந்திரம் அல்ல. இந்த ஹரே கிருஷ்ண மந்திரத்தை ஜெபம் செய்வதால் நாம் புருஷோத்தமரான முழுமுதற் கடவுளை அடைய முடியும் என்னும் பட்சத்தில், அஃது ஏன் இரகசியமாக வைக்கப்பட வேண்டும்? அஃது அனைவருக்கும் விநியோகிக்கப்பட்டு பரப்பப்படுமானால் அனைவருமே கிருஷ்ணரை அடைய இயலும். இதில் இரகசியம் ஏதும் இல்லை. நாங்கள் இரகசிய மந்திரத்திற்கு அனுமதி கொடுப்பதில்லை.

ஹரேர் நாம ஹரேர் நாம
ஹரேர் நாமைவ கேவலம்
கலௌ நாஸ்த்-யேவ நாஸ்த்-யேவ
நாஸ்த்-யேவ கதிர் அன்யதா

(சைதன்ய சரிதாம்ருதம்,
ஆதி லீலை 17.21)

சண்டையும் சச்சரவுகளும் நிறைந்த இக்கலி யுகத்தில் ஹரி நாமத்தை உச்சரிப்பதைத் தவிர வேறு வழியில்லை, வேறு வழியில்லை, வேறு வழியில்லை என்று மூன்று முறை வலியுறுத்தப்பட்டுள்ளது. தவம் புரிதல், யாகம் செய்தல், ஆலய வழிபாடு என பல வழிமுறைகள் உள்ளன. இருப்பினும் இக்கலி யுகத்தில் அவை உதவாது என்பதே "வேறு வழியில்லை" என்று மூன்று முறை கூறப்பட்டதன் உட்பொருளாகும். சிறு குழந்தை கூட இந்த ஹரே கிருஷ்ண மந்திரத்தை ஜெபிக்கலாம். சிறு குழந்தைகள் மட்டுமின்றி வயது முதிர்ந்தவர்களும் எளிதாக பங்கேற்கலாம். பகவானை அறிந் துணர இஃது ஒன்றே மிகச்சிறந்த வழிமுறையாகும். பணமோ, பொருளோ, செலவின்றி, அதே சமயம் இலாபகரமான மிக உயர்ந்த வழிமுறை. இதுவே பிரகலாத மஹாராஜரின் போதனை. இதையே நாங்கள் பின்பற்றுகிறோம். மஹாஜனங் களின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி மேன்மேலும் கிருஷ்ண பக்தியில் முன்னேறுவோம். நன்றி. ஹரே கிருஷ்ண!

# பசுத்தோல் போர்த்திய புலிகள்

## சாதுவின் வேடத்தில் போலிகள்





வழங்கியவர்:

தவத்திரு. பக்தி விகாஸ ஸ்வாமி

### சாதுக்கள் சீரழியும்போது...

சாதுக்களாக அறியப்படும் மதிக்கத்தக்க இறையன்பர்கள், (முறையற்ற காமச் செயல்களைப் போன்ற) கேவலமான நடத்தையில் ஈடுபட்டதை அம்பலப்படுத்தி இந்தியப் பத்திரிகைகளில் அவ்வப்போது செய்திகள் வருவதைக் காணலாம். முறையற்ற காமத்தில் ஈடுபட்டாலும் சரி, முறையான காமத்தில் ஈடுபட்டாலும் சரி, சந்நியாசம் ஏற்ற சாதுவைப் பொறுத்தவரையில், எல்லாவித காமச் செயல்களுமே முறையற்றதுதான். சில சமயங்களில், கொலைக் குற்றங்களும், மடத்திற்குள் நிகழும் சண்டைகளும்கூட வெளிவருகின்றன. ஊடகங்கள் அவற்றை வெளியிட, பிரச்சனை விஸ்வரூபம் எடுத்து, சாதுவின் பேரும் புகழும் பாதாளத்தை நோக்கிச் சென்றுவிடுகின்றன; பொதுமக்கள் பிரச்சனைக்குரிய சாதுவின் மீது கோபமடைகின்றனர்; அவரது சீடர்களில் பலர் அவரை விட்டு விலகிவிடுகின்றனர். மேலும், சீடர்கள் கிண்டல் செய்யப்படுவதும், ஆசிரமங்கள் சூறையாடப்படுவதும் தவிர்க்க முடியாதவையாகிவிடுகின்றன.

இதனை நல்வாய்ப்பாகக் கருதும் பெயரளவு பகுத்தறிவுவாதிகளும் நாத்திகர்களும், "உண்மையில் எல்லா சாதுக்களுமே போலிகள்தான்; எல்லாரும் ஏமாற்றுபவர்களே; சிலர் தற்போது மாட்டிக் கொண்டனர்; ஆனால் இதர சாதுக்களும் தகாத செயல்களில் ஈடுபடுபவர்களே," என்று ஊரெங்கும் அறிவிக்கின்றனர். சாதுக்கள் எவ்வாறு இருக்க வேண்டுமோ அவ்வாறு அவர்கள் இல்லாததையும், சாதாரண மனிதர்களைக் காட்டிலும் கீழ்த்தரமான செயல்களில் அவர்கள் ஈடுபடுவதையும் காணும் மக்கள் அதிருப்தியடைவது இயற்கையே. அதிலும் குறிப்பாக, புண்ணியவான்களாகவும், ஆன்மீகத்தில் உயர்ந்தவர்களாகவும், ஏன் கடவுளாகவும் விளம்பரப்படுத்தப்பட்ட நபர்கள் மாட்டிக் கொள்ளும்போது, அது பேரதிர்ச்சியை அளிக்கின்றது. அவர்களின் கீழ்த்தரமான நடத்தையைக் கண்டு, அவரது சீடர்களும் மிகவும் விரக்தியடைகின்றனர்.

### மக்களின் முட்டாள்தனம்

இத்தகு நிகழ்ச்சிகள் அம்பலப் படுத்தப்படும்போது, சமுதாயத்தில் பொதுவாக நன்மதிப்புடன் விளங்கும் இஸ்கான் பக்தர்களையும் பொதுமக்கள் சில காலங்களுக்கு ஒதுக்கிவிடுகின்றனர்; ஊடகங்களின் தாக்கத்தினால், எல்லா சாதுக்களுமே மோசமானவர்கள் என்று நினைக்கத் தொடங்குகின்றனர், அத்தகு எண்ணம் அறிவுப்பூர்வமானதல்ல. ஒன்று அல்லது இரண்டு பெயரளவு சாதுக்கள் மோசமானவர்களாக ஆன காரணத்தினால், எல்லாருமே மோசமானவர்கள் என்பது அர்த்தமல்ல. உண்மையில், இஸ்கானில் உறுப்பினராக இருக்க வேண்டுமெனில், ஒவ்வொருவரும் சில கொள்கைகளைக் கடைபிடிக்க வேண்டும்: மாமிசம், மீன், முட்டை ஆகியவற்றை சாப்பிடக் கூடாது, சூதாட்டம் கூடாது, போதை வஸ்துக்கள் கூடாது, தகாத பாலுறவும் கூடாது. அதிகாலையில் எழுவது உட்பட பல்வேறு கடுமையான ஆன்மீகப் பயிற்சிகளை அவர்கள் பின்பற்ற வேண்டும். எனவே, ஏமாற்றுப் பேர்வழிகளுடன் இஸ்கான் பக்தர்களை இணைப்பது என்பது சற்றும் அறிவற்ற செயல்.

ஆனால் பெரும்பாலான மக்கள் முட்டாள்களாக இருப்பதால், அவர்கள் அவ்வாறு செய்கின்றனர். போலி சாதுக்களை அத்தகு மக்கள் முன்பு

**தகாத காமச் செயல்களிலோ, சட்ட விரோத செயல்களிலோ ஈடுபட்டதால் மட்டும் அவர்கள் போலிகள் அல்ல. அவர்கள் பிரச்சாரம் செய்த கருத்துகளும் கொள்கைகளும் அவர்களை ஆரம்பத்திலிருந்தே போலிகளாகக் காட்டுகின்றன.**

ஏற்றுக் கொண்டிருந்தனர் என்பதே அவர்களது முட்டாள்தனத்தின் சாட்சி. இந்த மனிதர்கள் அனைவரும் போலிகள் என்பதை இஸ்கான் பக்தர்கள் எப்போதும் பிரச்சாரம் செய்து வருகின்றனர். மக்கள் முட்டாள்களாக இருந்திராவிடில், இத்தகு போலி மனிதர்களை 'போலிகள்' என்று ஊடகங்கள் அறிவிப்பதற்கு முன்பே, பொதுமக்கள் அவர்களைப் 'போலிகள்' என்று உணர்ந்திருப்பர். தகாத காமச் செயல்களிலோ சட்ட விரோத செயல்களிலோ ஈடுபட்டதால் மட்டும் அவர்கள் போலிகள் அல்ல. அவர்கள் பிரச்சாரம் செய்த கருத்துகளும் கொள்கைகளும் அவர்களை ஆரம்பத் திலிருந்தே போலிகளாகக் காட்டுகின்றன.



மாமிசம், சூதாட்டம், போதை வஸ்துக்கள், தகாத பாலுறவு ஆகிய நான்கு பாவச் செயல்களை ஒவ்வொருவரும் தவிர்க்க வேண்டும்.

## போலிகளின் தன்மைகள்

சாஸ்திரங்களின் உண்மையான போதனைகளையும் பகவத் கீதையின் உண்மையான ஆன்மீக ஞானத் தினையும் வழங்காமல், தங்களைத் தாங்களே ஆன்மீகத் தலைவர் களாகக் காட்டிக்கொள்ளும், பெயரள விலான இந்த பாபாக்கள், பாபுக்கள், அம்மாக்கள், ஸ்ரீ-ஸ்ரீகள் என இவர்கள் அனைவருமே ஏமாற்றுப் பேர் வழிகள்தான். ஆன்மீகத்தின் இறுதி உண்மையும் மக்களுக்கு உதவக்கூடிய ஒரே ஞானமுமான முழுமுதற் கடவுள் கிருஷ்ணரை முன்வைக்காமல், தங்களது சீடர்களிடமிருந்து பணத்தை வாங்கிக் கொண்டு எல்லா அபத்தங் களையும் பேசும் இவர்கள், தங்களது சீடர்களால் மிகப்பெரிய சாதுவாக விளம்பரப்படுத்தப்படுவதில் இன்பமடை கின்றனர். நீதிக்குப் புறம்பான தகாத செயல்களில் அவர்கள் வெளிப்படையாக ஈடுபடாதபோதிலும், சீடர்களுக்கு ஆன்மீக நன்மையை வழங்கக்கூடிய போதனைகள் அவர்களிடம் இல்லாத காரணத்தினால், தங்களைத் தாங்களே ஆன்மீகத் தலைவர்களாகக் காட்டிக் கொள்ளும் இவர்களது செயல், நீதிக்குப் புறம்பான தகாத செயல்களைக் காட்டிலும் மோசமானதாகும். இந்த ஏமாற்றுப் பேர்வழிகள், தங்களது சீடர்களுக்கு ஆசி வழங்குகின்றனரேயொழிய, அவர்களது உணர்வுகளை மாற்றிக் கொள்ளும்படியும், பௌதிக எண்ணத் திலிருந்து வெளிவரும்படியும், இவ்வுல கிலுள்ள அனைத்தும் தற்காலிகமானது

**நீதிக்குப் புறம்பான தகாத செயல்களில் சிலர் வெளிப்படையாக ஈடுபடாதபோதிலும், சீடர்களுக்கு ஆன்மீக நன்மையை வழங்கக்கூடிய போதனைகள் அவர்களிடம் இல்லாத காரணத்தினால், தங்களைத் தாங்களே ஆன்மீகத் தலைவர்களாகக் காட்டிக் கொள்ளும் இவர்களது செயல், நீதிக்குப் புறம்பான தகாத செயல்களைக் காட்டிலும் மோசமானதாகும்.**

என்பதைப் புரிந்துகொள்ளும்படியும் ஒருபோதும் அறிவுறுத்துவதில்லை.

## ஏமாற விரும்பும் மக்கள்

ஆனால் மக்கள் முட்டாள்களாக உள்ளனரே. உண்மையில் இத்தகு சாதுக்களால்ஏமாற்றப்படுவதற்குஅவர்கள் விரும்புகின்றனர். நானும் ஆன்மீகவாதி, மதத்தைப் பின்பற்றுபவன் என்னும் போலியான நல்லுணர்வுடன் இருக்க அவர்கள் நினைக்கின்றனர்; ஆனால் முற்றிலும் பௌதிகவாதிகளாக இருக்கும் காரணத்தினால் ஏமாற்றும் சாதுக்களிடம் செல்கின்றனர். துன்பத்திலிருந்தும் பிரச்சனைகளிலிருந்தும் விடுபட்டு இந்த ஜடவுலகத்தில் இருந்தபடியே மிகவும் அற்புதமான வாழ்வை அனுபவிக்கலாம் என்ற எதிர்பார்ப்புடன், கடவுளின் ஆசியையும் குருவின் ஆசியையும் பெற மக்கள் சாதுவை (அல்லது தேவாலய பாதிரியாரை) அணுகுகின்றனர். அத்தகு எதிர்பார்ப்பு அபத்தமானது; ஏனெனில், சற்றேனும் ஆன்மீக அறிவு பெற்ற மனிதன்கூட இந்த ஜடவுலகம் துன்பம் நிறைந்த இடம், இன்பத்திற்கான இடமல்ல என்பதை புரிந்துகொள்ள முடியும். இது பகவத் கீதையிலும் கூறப்பட்டுள்ளது.

இக்கருத்தினை தனது சீடர்களுக்கும் மற்றவர்களுக்கும் உபதேசிப்பதே உண்மையான சாதுவின் கடமையாகும். ஆனால் மக்களோ இவற்றைக் கேட்க விரும்புவதில்லை, ஏமாற்றப்படவே விரும்புகின்றனர். ஏமாற்றும் சாதுக்கள் கண்டறியப்படும்போது, அதற்குக் காரணமாக இருந்த மக்கள் கோபப்படுவது சரியாகுமா? ஆரம்பத்திலிருந்தே அவர்கள் ஏமாற்றுக்காரர்கள்தான், தற்போது கோபத்தை வெளிப்படுத்தும் மக்கள், அந்த பெயரளவு சாதுக்களின் ஏமாற்றுத் தொழிலுக்கு முன்பு உடந்தையாக செயல்பட்டனர். சாதுக்களை தற்போது திட்டித் தீர்ப்பவர்களும் ஏமாற்றுப் பேர்வழிகளே; இல்லையெனில், அந்த ஏமாற்றுக்கார சாதுக்களுக்கு அவர்கள் ஏன் ஆதரவு கொடுத்தனர்?

## இஸ்கான் பக்தர்களின் நிலை

மறுபக்கத்தில் பார்த்தால், இவ்வெல்லா ஏமாற்றுக்காரர்களுக்கும் எதிராக இஸ்கான் பக்தர்கள் பிரச்சாரம் செய்யும்போது, மக்கள் கேட்பதற்கு விரும்புவதில்லை. "இந்த (ஏமாற்றுக்கார) சாதுக்களின் குறைகளை நீங்கள் ஏன் சுட்டிக் காட்டுகின்றீர்கள்?" என்று அவர்கள் இஸ்கான் பக்தர்களிடம் கடிந்து கொள்வதும் வழக்கம். அதுமட்டுமின்றி, ஏமாற்றுக்காரர்களின் முகத்திரை வெளிப்படும்போது, "இஸ்கான் பக்தர்களின் கூற்றுகள் சரியே" என்று பாராட்டுவதற்கு பதிலாக, தற்போது கிழித்தெறியப்பட்டுள்ளபோலிசாதுக்களின் இனத்துடன் இஸ்கான் பக்தர்களையும் இணைத்து குற்றம் சாட்டுவது என்பது மக்களின் இரட்டிப்பு முட்டாள்தனத்தைக் காட்டுகின்றது. சாதுக்களின் மீதானமக்களின்ஒட்டுமொத்த அபிப்பிராயமும் மாற்றமடைந்துள்ளது. உண்மையில், சாது என்றால்என்னஎன்பதை அவர்கள் அறியார்கள்.

## சாதுக்கள் ஆசிர்வாத கருவிகளா?

சாது எப்படி இருக்க வேண்டும் என்பது குறித்து ஒவ்வொருவரும் தங்களுக்கென்று சொந்தக் கருத்துகளை உருவாக்குகின்றனர்: நன்றாகப் பழகுபவர், புன்சிரிப்புடன் திகழ்பவர், ஆசி வழங்குபவர், நல்லவர்களாக வாழச் சொல்பவர், தான் நல்லவனே என்று உங்களை நினைக்கச் செய்பவர் --இதுவே சாதுவின் அடையாளமாக அவர்கள் நினைக்கின்றனர். அத்தகு எண்ணத்திற்குத் தகுந்தாற் போல வாழ்ந்து, அவர்களை ஏமாற்றும் சாதுக்கள் ஏராளம். அதுதான் ஆன்மீகம் என்று அவர்கள் நினைக்கின்றனர்.

உண்மையான சாதுவோ, ஜடவுலக வாழ்க்கை நல்லதல்ல என்றும், வெறுமனே நன்றாகப் பழகி, மக்களிடம் சிரித்தால் மட்டும் போதாது என்றும்




வரைபடம்: சுதாகர்

சாது என்பவர் இதுபோன்ற ஆசிர்வாதக் கருவியாக இருக்க வேண்டும் என்று மக்கள் நினைப்பது அவர்களின் முட்டாள்தனமாகும்.

உங்களிடம் கூறுவார்; புகையிலை, மதுபானம் போன்றவற்றைத் தவிர்க்க வேண்டும் என்று யாரேனும் ஒருவர் உங்களுக்கு நல்ல உபதேசம் வழங்கி னாலும், அந்த நல்ல உபதேசமே ஆன்மீகமாகி விடாது என்பதை உண்மை யான சாதுக்கள் எடுத்துரைப்பர். எல்லா பௌதிக ஆசைகளையும் துறந்து கிருஷ்ணரிடம் முழுமையாக சரண டைவதே உண்மையான ஆன்மீக வாழ்க்கை. ஆனால் இதனைக் கேட்ப தற்கு மக்கள் விரும்புவதில்லை, சாதுக் களிடமிருந்து என்ன கேட்கப்பட வேண்டு மோ அவற்றைக் கேட்பதற்கான பழக்கம் அவர்களிடம் இல்லை. தங்களுக்கு இன்பமளிக்கும் விஷயங்களைக் கேட்பதில் மட்டுமே அவர்கள் ஆர்வமுடை யவர்களாக உள்ளனர். ஆனால், பகவத் கீதையை உள்ளது உள்ளபடி, எந்தக் கலப்படமும் இன்றி, குருவிடமிருந்து கேட்பதுவே ஒரு சீடனின் தலையாய கடமையாகும்.



அத்தகு கடமையை மக்கள் ஒருபோதும் நிறைவேற்றாத காரணத் தினால், ஏமாற்றுபவர்களை சாதுக்களாக எண்ணி முட்டாள்தனத்தினால் மயக்கப்படுகின்றனர். அம்மாக்கள், பாபாக்கள், பாபுக்கள், ஸ்ரீ-ஸ்ரீகள் என இவர்கள் அனைவருமே அயோக் கியர்கள், ஏமாற்றுபவர்கள், அபத்த மானவர்கள், முட்டாள்கள். இதனைப் புரிந்துகொள்வதற்கு சிறப்பான புத்தி ஏதும் அவசியமில்லை. இருப்பினும், இதனைப் புரிந்துகொள்ள விரும்பாத மக்கள், இவற்றைப் பற்றி கேட்பதற்குக்கூட விரும்புவதில்லை. உண்மையான சாதுக்களிடமிருந்து என்றுமே கேட்ட தில்லை என்பதால், இஸ்கான் சாதுக்களையும் ஒருவகையான ஆசீர்வாத கருவிகளாக நினைக்கும் இவர்களால், இஸ்கான் பக்தர்களிட மிருந்து வரும் கடுமையான சொற்களைக் கேட்க முடிவதில்லை. அவ்வாறு இருப்பினும், இஸ்கான் பக்தர்கள் ஒருபோதும் ஆசீர்வாதக் கருவிகளாக மாறிவிடக் கூடாது; கேட்பதற்கான ஆர்வம் மக்களிடம் இல்லை என்றாலும், உண்மையை எப்போதும் பேசிக் கொண்டே இருக்க வேண்டும்.

**ஆன்மீகத்தை முறைப்படி அறிந்துகொள்வதில் தங்களது புத்தியை உபயோகிக்காத காரணத் தினால், அந்த பகுத்தறிவாளர்களும் உண்மையான புத்திசாலிகள் அல்ல.**

## பகுத்தறிவாளர்களின் நிலை

ஒரு விதத்தில் பார்த்தால், புத்தியை உபயோகித்து விஷயங்களைப் புரிந்துகொள்ள வேண்டும் என்று முன்னுரைக்கும் பெயரளவிலான பகுத்தறிவாளர்கள் சிறந்தவர்களே. ஆனால், ஆன்மீகத்தை முறைப்படி அறிந்துகொள்வதில் தங்களது புத்தியை உபயோகிக்காத காரணத்தினால், அந்த பகுத்தறிவாளர்களும் உண்மையான புத்திசாலிகள் அல்ல. 'ஏமாற்றும் சாதுக்கள் இலட்சக்கணக்கில் இருந்தாலும் (அது துரதிர்ஷ்டமானது என்றபோதிலும்), எல்லா சாதுக்களுமே ஏமாற்றுபவர்கள் அல்ல'—இதைப் புரிந்துகொள்வதற்கான பகுத்தறிவு, சாதுக்களைப் புறக்கணிக்கும் பெயரளவு பகுத்தறிவாளர்களிடம் இல்லை. தங்களைப் பகுத்தறிவாளராகக் காட்டிக் கொள்ளும் மனிதர்கள், பகவத் கீதையில் கூறப்பட்டுள்ள கருத்துகள் உண்மையானவை என்பதையும், இன்றைக்கும் பொருந்தக்கூடியவை என்பதையும் உணர வேண்டும். இந்த ஜடவுலகம் துன்பமயமான இடம், இங்குள்ள அனைத்துமே தற்காலிகமானவை போன்ற பகவத் கீதையின் உபதேசங்களை அவர்கள் ஏன் உணர மறுக்கின்றனர்?

## உண்மை கசக்கும்

பகவத் கீதையின் உபதேசங்களைப் புரிந்துகொள்ள முயற்சி செய்யுங்கள். ‘‘ஏமாற்றுபவர்களையும் ஏமாறு பவர்களையும் கொண்ட உலகத்தில் நாம் வாழ்கிறோம்’’ என்பது போன்ற உண்மைகளை நாம் பேசினால், அதைக் கேட்க விரும்பாத மக்கள், எங்களின் மீது கோபமடைவது துரதிர்ஷ்டமான சூழ்நிலையாகும். ஸச் போலே தோ மரே லடி, ஜூத் ஜகாதே மோஹாய் என்னும் இந்தி பழமொழியின்படி, உண்மையைப் பேசினால் மக்கள் குச்சியினால் அடிப்பர், பொய் பேசினால் அனைவரும் மயக்கப்பட்டு நன்றாக இருந்தது என்பர். வெளித்தோற்றத்தினால் மயங்கிவிடாதீர்கள். காட்டில் வசிக்கும் குரங்கையும் அங்குள்ள ஒரு சாதுவையும் பார்த்தால் ஒன்றுபோலவே தோன்றும். இருவருமே பழத்தைத் தின்று வாழ்கின்றனர்; இருவருமே நிர்வாணமாகத் திரிகின்றனர்; இருவருக் குமே வீடோ சொத்துக்களோ கிடையாது. இருப்பினும், குரங்கு எப்போதுமே குரங்குதான், சேட்டை செய்வதும் பெண் குரங்குகளுடன் இன்பமடைவதுமே குரங்கின் பணியாகும். ஆனால் உண்மையான சாதுவோ ஆன்மீக முன்னேற்றத்தில் கவனம் செலுத்துகிறார்.

## சாதுவா? குரங்கா?

குரங்கு போன்ற சாதுவையும் உண்மையான சாதுவையும் வேறு படுத்திப் பார்க்கும் அறிவுத்திறன் மக்களிடம் அவசியம் இருக்க வேண்டும். உலகிலுள்ள பெரும்பாலான சாதுக்கள் அங்குமிங்கும் திரியும் குரங்குகளைப் போன்றவர்களே, அந்தக் குரங்குகளைக் கண்மூடித்தனமாகப் பின்பற்றும் சீடர்களும் குரங்குகளே. காலப்போக்கில், அந்த குரு தாங்கள் எதிர்பார்த்தபடி இல்லை என்பதையும் குரங்கினைப் போன்று உள்ளார் என்பதையும் அந்த சீடர்கள் அறியவரும்போது, மிகவும் சஞ்சலமடைகின்றனர். உண்மையில் வெறுமனே புலனின்பத்தை விரும்பும் அவரது சீடர்களும் குரங்குகள்தான். எனவே, நீங்கள் குரங்காக இருந்தால்,

உங்களது பெயரளவு குருவும் குரங்காக இருப்பதைக் கண்டு ஆச்சரியப்பட வேண்டாம். நீங்கள் மனிதராக இருக்க விரும்பினாலும் சரி, அதனைத் தாண்டி ஆன்மீக வாழ்வில் உண்மையான முன்னேற்றம் பெற விரும்பினாலும் சரி, அங்கீகரிக்கப்பட்ட ஆன்மீக குருவை அணுகுவதில் நீங்கள் ஆர்வம் காட்ட வேண்டும்.

*தத் விக்ஞானார்தம் ஸ குரும் ஏவாபிகச்சேத்* (முண்டக உபநிஷத் 1.2.12), அதாவது, ஆன்மீக விஞ்ஞானத்தைப் புரிந்துகொள்வதில் ஒருவன் உண்மையிலேயே ஆர்வமுடையவனாக இருந்தால், அவன் உண்மையான குருவை அணுக வேண்டும். ஆனால் மக்களோ ஆர்வமுடையவர்களாக இல்லை; அவர்கள் ஏமாற விரும்புகின்றனர். இதனால்தான், கிருஷ்ணர் ஏமாற்றுக்காரர்களை அனுப்புகிறார். உங்களுக்கு யார் கிடைக்க வேண்டுமோ அவர்தான்கிடைப்பார். உங்களது ஆன்மீக வாழ்வில் நீங்கள் ஆர்வமுடையவராக இருந்தால், உண்மையான அறிவை வழங்கக்கூடியவரிடம் வாருங்கள். அந்த உண்மையான குரு, ஸ்ரீ-ஸ்ரீ போன்ற அயோக்கியர்களையும்முட்டாள்களையும் ஒருபோதும் பொறுத்துக் கொள்ள மாட்டார்.

## யார் உண்மையான சாது?

யாரொருவன் பகவத் கீதையை உள்ளது உள்ளபடி பின்பற்றுகின்றானோ, ஜடத்திற்கும் ஆன்மீகத்திற்கும் இடையிலான வேறுபாட்டை அறிந்துள்ளானோ, பௌதிக புலனுகர்ச்சியில் ஆர்வமின்றி இருக்கின்றானோ, கிருஷ்ணருக்கு சேவை செய்வதைத் தவிர வேறு எந்த சுய விருப்பமும் இல்லாமல் மற்றவர்களுக்கு நன்மையளிப்பதற்காக இவ்வுலகில் வாழ்கின்றானோ, கிருஷ்ணரே பரம பூரண உண்மை என்பதை எல்லா சாஸ்திரங்களிலிருந்தும் புரிந்துகொண்டுள்ளானோ, அவனே சாது. வேறு யாரையும் சாதுவாக நாம் கூறிவிட முடியாது.

*வாசோ வேகம் மனஸ: க்ரோத-வேகம்*
*ஜிஹ்வா-வேகம் உதரோபஸ்த-வேகம்*
*ஏதான் வேகான் யோ விஷஹேத தீர:*
*ஸர்வாம் அபீமாம் ப்ருதிவீம் ஸ ஷிஷ்யாத்*

“பேச்சின் தூண்டுதல், மனதின் தூண்டுதல், கோபத்தின் தூண்டுதல், நாக்கு, வயிறு, மற்றும் பாலுறுப்பின் தூண்டுதலை கட்டுப்படுத்தக்கூடிய நிதான புத்தியுடையோர் உலகமெங்கும் சீடர்களை ஏற்கும் தகுதியுடையவர்கள்.” (உபதேசாமிருதம், ஸ்லோகம் 1) இந்த ஸ்லோகத்தையும் இதற்கு ஸ்ரீல பிரபுபாதர் அருளியுள்ள பொருளுரையையும் மக்கள் படிக்க வேண்டியது அவசியம். (இப்புத்தகம் இஸ்கான் கோவில்களில் கிடைக்கும்)

**மக்கள் ஏமாற விரும்புகின்றனர். இதனால்தான், கிருஷ்ணர் ஏமாற்றுக்காரர்களை அனுப்புகிறார். யார் கிடைக்க வேண்டுமோ அவர்தான் கிடைப்பார்.**

**பிரபஞ்சம் எவ்வாறு எல்லையற்றதோ அதுபோல மக்களின் முட்டாள்தனமும் எல்லையற்றது—ஐன்ஸ்டின்**

## போலிகள் மீண்டும் வலம் வருவர்

இன்னொரு கருத்து என்னவெனில், முகத்திரை கிழிக்கப்பட்டு அவப்பெயர் பெற்ற ஏமாற்றுக்காரர்கள், சில வருடங்களுக்குப் (அல்லது மாதங்களுக்குப்) பின், தங்களது தொழிலில் வழக்கம்போல செயல்படத் தொடங்கி விடுகின்றனர். உதாரணமாக, தனது சீடர்கள் தன்னை “பகவான்” என்று அழைப்பதை அனுமதித்துள்ள தென்னிந்தியாவைச் சார்ந்த சாது ஒருவர், சிறுவர்களை பாலியல் ரீதியாகத் துன்புறுத்தினார் என்றும், அவரது தந்திரங்களும் அதிசயங்களும் ஏமாற்று வித்தைகளே என்றும் பல வருடங்களுக்கு முன்பு பத்திரிகைகளாலும் தொலைக்காட்சிகளாலும் கிழித்தெறியப் பட்டார். ஆனால், மிகவும் மோசமான கீழ்நிலை மனிதன் என்று தெரியப் படுத்தப்பட்ட பின்பும், அறிவாளிகளைப் போலத் தோன்றும் உயர் கல்வி கற்ற நபர்கள் உட்பட, பொதுமக்கள் பலரும் அவரை கடவுளாக தொடர்ந்து நம்பிக் கொண்டுதான் உள்ளனர். இதுபோன்று எத்தனையோ பேர் உள்ளனர். பிரபஞ்சம் எவ்வாறு எல்லையற்றதோ அதுபோல மக்களின் முட்டாள்தனமும் எல்லையற்றது என்று ஐன்ஸ்டின் கூறியுள்ளார். *அசலாம் ஷ்ரத்தாம்*, நம்பிக்கை வைக்கக்கூடாதவற்றின் மீது நம்பிக்கை வைத்தல், என்று பகவத் கீதையில் (7.21) கிருஷ்ணர் கூறுவதை இது நிரூபிக்கின்றது. *அஸத்யரே ஸத்ய கரி மனி*, உண்மையல்லாதவற்றை மக்கள் உண்மையாக ஏற்றுள்ளனர்.

## இறுதியாக சில வரிகள்

*தமஸி மா ஜ்யோதிர் கம*, “இருளை விட்டு வெளிச்சத்திற்கு வாருங்கள்.” (பிருஹத் ஆரண்யக உபநிஷத் 1.3.28) *உத்திஷ்ட ஜாக்ரத ப்ராப்ய வரான் நிபோதத*, “எழுந்து கொள்ளுங்கள், விழித்துக் கொள்ளுங்கள், மனித வாழ்வின் நற்பலனை அடையுங்கள்”— இவையே எமது வேண்டுகோள். எத்தனை பேர் இதற்குத் தயாராக உள்ளீர்கள்?

உண்மையை ஏற்றுக் கொள்ளுங்கள்; இல்லையெனில் ஏமாற்றப்படுவீர்கள். உண்மை வேண்டுமா? ஏமாற்றம் வேண்டுமா? நீங்களே முடிவு செய்யுங்கள்.

**தவத்திரு. பக்தி விகாஸ ஸ்வாமி,** இங்கிலாந்தில் பிறந்து கடந்த 35 வருடங்களாக கிருஷ்ண பக்தி இயக்கத்தில் தொண்டுசெய்துவருபவர். ஸ்ரீல பிரபுபாதரின் நேரடி சீடரும், மூத்த சந்நியாசியுமான இவர், பல்வேறு புத்தகங்களுக்கு ஆசிரியருமாவார்.

(தமிழாக்கம்: ஸ்ரீ கிரிதாரி தாஸ்)

**பின்குறிப்பு: உண்மையான குருவைப் பற்றியும் போலி குருவைப் பற்றியும் மேலும் அறிந்துகொள்ள, ஸ்ரீல பிரபுபாரதரின் “தன்னையறியும் விஞ்ஞானம்” என்னும் புத்தகத்தைப் படிக்கவும்.**

# அசுரர்களின் எதிரி; பக்தர்களின் பாதுகாவலர்

**ஸ்ரீதாம் மாயாபூரில் பகவான் நரசிம்மர் தோன்றிய வரலாறு**

**வழங்கியவர்: ஸ்ரீமதி தேவி தாஸி**

*அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் சர்வதேச தலைமையகம் மேற்கு வங்காளத்திலுள்ள மாயாபூரில் உள்ளது. அங்கு வீற்றிருக்கும் உக்கிர நரசிம்மர் (அருகிலிருக்கும் படத்தைப் பார்க்கவும்) அங்கு வரும் பக்தர்களைக் கவர்ந்து பற்பல அதிசயங்களை நிகழ்த்தி வருகிறார். அவர் அங்கு தோன்றியதன் அற்புத வரலாற்றினை இங்கு சுருக்கமாக வழங்குகிறோம்.*

---

## கொள்ளையர்களின் தாக்குதல்

1984ம் வருடம், மார்ச் மாதம் 24ம் தேதியன்று மதியம் 12:20 மணியளவில், சுமார் முப்பத்தைந்து குண்டர்கள், ஸ்ரீதாம் மாயாபூரில் உள்ள இஸ்கானின் சந்திரோதய கோயிலை ஆயுதங்களுடனும் குண்டுகளுடனும் தாக்கினர். பக்தர்களை மிகவும் மோசமாக நடத்திய அந்தக் கொள்ளையர்கள், ஸ்ரீல பிரபுபாதரின் மூர்த்தியையும் ஸ்ரீமதி ராதாராணியின் விக்ரஹத்தையும் திருடிச் செல்ல முடிவு செய்தனர். இதனால் மிகவும் அதிர்ச்சிக்குள்ளான பக்தர்கள், அக்கொள்ளையர்களை பயமின்றி எதிர் கொண்டனர். ஸ்ரீல பிரபுபாதரையும், ஸ்ரீமதி ராதாராணியையும் கடத்திச் செல்வதை அவர்களால் எவ்வாறு பார்த்துக் கொண்டிருக்க முடியும்? சண்டை தீவிரமடைய, துப்பாக்கி குண்டுகள் அங்குமிங்கும் பாய்ந்தன, சில கொள்ளையர்கள் பலியாயினர், பக்தர்கள் சிலரும் பாதிக்கப்பட்டனர். இறுதியில் கொள்ளையர்களின் திட்டம் முறியடிக்கப்பட்டது. ஸ்ரீல பிரபுபாதரின் மூர்த்திக்கு எந்த பாதிப்பும் இல்லை, ஆயினும் ஸ்ரீமதி ராதாராணியின் உருவம் சேதமடைந்த காரணத்தினால், அதன் பின்னர் அவரால் விக்ரஹ மேடையை அலங்கரிக்க முடியாமல் போய்விட்டது.

## நரசிம்மரை பிரதிஷ்டை செய்யலாம்

இந்நிகழ்ச்சி பக்தர்களின் மனதை மிகவும் பாதித்தது. இதுபோன்ற தாக்குதல்களையும் துன்பங்களையும் சந்திப்பது மாயாபூர் பக்தர்களுக்கு முதல்முறை அல்ல என்பதால், இவற்றிற்கு ஒரு நிரந்தரத் தீர்வு காண கோவில் நிர்வாகிகள் ஆயத்தமாயினர். மாயாபூர் இஸ்கான் ஆலயத்தின் அப்போதைய இணை இயக்குனரான திரு. பவானந்த தாஸ், பகவான் நரசிம்மதேவரைப் பிரதிஷ்டை செய்யுமாறு அறிவுறுத்தினார். முன்னொரு காலத்தில், பகவான் ஸ்ரீ சைதன்யரின் அவதார ஸ்தலமாகிய யோகபீடத்திற்கு வருகைதரும்பக்தர்களை கொள்ளையர்கள் பயமுறுத்தியபோது, ஸ்ரீல பக்திவினோத தாகூரும், அவரது மகன் ஸ்ரீல பக்திசித்தாந்த சரஸ்வதி தாகூரும், உடனடியாக ஸ்ரீஸ்ரீ இலட்சுமி நரசிம்மரை பிரதிஷ்டை செய்தனர். அதன் பின்னர், அங்கு அதுபோன்ற தடங்கல்கள் ஏதும் ஏற்படவில்லை. அதனை நினைவுகூர்ந்த பவானந்தர், இஸ்கான் கோவிலிலும் நரசிம்மரை பிரதிஷ்டை செய்ய வேண்டும் என்பதில் ஆவலுடன் இருந்தார்.

## வரைபடங்களும் நன்கொடையும்

பவானந்தரின் வேண்டுகோளின்படி, திரு. பக்திசித்தாந்த தாஸ், திரு. ஆத்ம தத்துவ தாஸ் ஆகிய இருவரும் சில படங்களை வரையத் தொடங்கினர். "விக்ரஹத்தின் கால்கள், குதிப்பதற்குத் தயாராக வளைந்திருக்க வேண்டும். அவர் மிகவும் உக்கிரமான முறையில் சுற்றும் முற்றும் பார்ப்பதைப் போல அமைய வேண்டும். அவரது விரல்கள் வளைந்திருக்க வேண்டும். அவருடைய தலையிலிருந்து தீ ஜ்வாலைகள் வரவேண்டும்" என்று பவானந்தர் விவரிக்க, அதனை ஆத்ம தத்துவ தாஸ் அப்படியே வரைந்தார். பக்தர்கள் அவ்வரைபடத்தை ரசித்தனர்; திரு. பங்கஜாங்கிரி தாஸ் நரசிம்மரை பூஜிக்க ஒப்புக்கொண்டார். கல்கத்தாவில் வசித்த செல்வந்த பக்தரான, திரு. ராதாபாதர் விக்ரஹத்தை வடிவமைக்கும் செலவையும், பிரதிஷ்டை செய்வதற்கான செலவையும் ஏற்க முன் வந்தார். அவர் உடனடியாக எந்த தயக்கமும் இன்றி 1,30,000 ரூபாய் நன்கொடையை வழங்கினார். அப்போது நரசிம்மர் மூன்று மாதத்தில் பிரதிஷ்டை செய்யப்படுவார் என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

## ஸ்தபதி தேடும் படலம்

அடுத்த கட்ட நடவடிக்கைகளுக்காக, ஆத்ம தத்துவ தாஸ் தென்னிந்தியாவிற்கு அனுப்பி வைக்கப்பட்டார். கிருஷ்ணரின் கருணையினால் மிகவும் பிரசித்தி பெற்ற ஒரு ஸ்தபதியை அவர் கண்டுபிடித்தார். வடிவமைக்க விரும்பும் விக்ரஹம், உக்கிர நரசிம்மர் என்பதை கேட்கும்வரை அந்த ஸ்தபதி மிகவும் சாதகமாக இருந்தார். ஆனால் உக்கிர நரசிம்மர் என்பதைக் கேட்ட மாத்திரத்தில், உறுதியாக மறுப்பு தெரிவித்தார். இதர ஸ்தபதிகளும் மறுப்புத் தெரிவிக்க, ஆத்ம தத்துவ தாஸ் மாயாபூருக்கும் தென்னிந்தியாவிற்கும் இடையில் பலமுறை பயணம்



மேற்கொண்டார். ஆறு மாதங்கள் உருண்டோடின.

முதன் முதலில் சந்தித்த ஸ்தபதியையே மீண்டும் சந்திக்க, இம்முறை அவர் சிறிது அனுகூலமாக நடந்து கொண்டார். சிற்ப சாஸ்திரத்திலிருந்து (விக்ரஹங்களையும் கோவிலையும் வடிவமைப்பதற்கான கலை குறித்த சாஸ்திரத்திலிருந்து) ஓர் அத்தியாயத்தைப் படித்துக் காட்டினார். அதில் விக்ரஹங்களின் பலவித உருவங்களைப் பற்றி விளக்கப்பட்டிருந்தது. பகவான் நரசிம்மரைப் பற்றி விளக்கும் சில ஸ்லோகங்களை உரக்கப் படித்துக் காண்பித்தார். நரசிம்மரின் நெருப்பை ஒத்த நீளமான பிடறி முடியையும், தேடும் நோக்கத்துடனான பார்வையையும், முழங்கால்கள் ஓர் அடி முன்புறம் வளைந்து தூணில் இருந்து குதிப்பதற்குத் தயாராக இருப்பது போன்ற நிலையையும் அவை விளக்கின. அவ்விளக்கங்களைக் கேட்ட ஆத்ம தத்துவர் மிகவும் ஆச்சரியப்பட்டார்; ஏனெனில், அவர் விரும்பி வரைந்து வைத்திருந்த வரைபடத்தை ஒத்திருந்தது அவரது விளக்கங்கள். வரைபடத்தைப் பார்த்த ஸ்தபதி, சாஸ்திரத்தை அடிப்படையாகக் கொண்டு அதனைச் சற்று மாற்றியமைக்க வேண்டும் என்றார். அவரே புதிய வரைபடத்தை வரைந்து ஒரு வாரத்தில் கொண்டு வந்தார். வரைபடம் மனத்திருப்தியை வழங்க, அந்த ஸ்தபதிதான் விக்ரஹத்தை வடிவமைக்க வேண்டும் என்று அனைவரும் விரும்பினர். அவரை ஒப்புக்கொள்ள வைப்பதற்காக ஆத்ம தத்துவ தாஸ் மீண்டும் தென்னிந்தியாவிற்கு அனுப்பப்பட்டார்.

## ஸ்தபதியின் ஒப்புதல்

நேராக ஸ்தபதியின் வீட்டிற்குச் சென்ற ஆத்ம தத்துவ தாஸ், பகவான் நரசிம்ம தேவரிடம் கருணை காட்டும்படியும், மாயாபூர் தாமத்தில் உள்ள நம் கோயிலில் எழுந்தருள ஒப்புக்கொள்ளும்படியும் வேண்டிக் கொண்டார். அதைத் தவிர அவரால் வேறு என்ன செய்ய முடியும்? ஸ்தபதியிடம் அவர் இரண்டொரு வார்த்தைகள்தான் பேசியிருப்பார். ஆச்சரியம் என்னவெனில், ஸ்தபதி அந்த விக்ரஹத்தை வடிவமைப்பதாக ஒப்புக் கொண்டார். ஸ்தபதி தனது முடிவை மாற்றிக் கொண்டதற்கான கதை மிகவும் சுவாரஸ்யமானது.

காஞ்சி மடத்தின் அப்போதைய சங்கராசாரியரான ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதியே ஸ்தபதியின் குருவாவார்.



மாயாபூரில் உள்ள இஸ்கான் தலைமையகத்தின் ஒரு பகுதி (ஸ்ரீல பிரபுபாதரின் புஷ்ப சமாதி).

இஸ்கானின் வேண்டுகோளைப் பற்றி விவாதிக்க அந்த ஸ்தபதி தனது குருவைச் சந்தித்திருந்தார். அப்போது, "அதை செய்து கொடுக்காதே, உன்னுடைய குடும்பம் அழிந்து விடும்" என்று உடனடியாக பதிலளித்தார். இருப்பினும், சிறிது யோசனைக்குப் பிறகு, "இந்த விக்ரஹத்தை (உன்னிடம்) வடிவமைக்கச் சொன்னது யார்?" என்று வினவினார். மாயாபூரில் உள்ள ஹரே கிருஷ்ண இயக்கத்தினர் தான் இதனை வடிவமைக்கச் சொன்னார்கள் என்று அவர் பதில் கூற சங்கராசாரியர் சிறிது கவலைப்பட்டார்: "அவர்கள் உக்கிர நரசிம்மரை விரும்புகிறார்களா? உக்கிர நரசிம்மரை வடித்து பிரதிஷ்டை செய்வதன் விளைவுகளைப் பற்றி அவர்களுக்குத் தெரியுமா? மிகவுயர்ந்த ஸ்தானத்தில் இருந்த ஸ்தபதிகளால் 3000 வருடங்களுக்கு முன்பு இம்மாதிரி விக்ரஹங்கள் வடிவமைக்கப்பட்டன, மைசூருக்குப் போகும் வழியிலுள்ள ஓரிடத்தில் மிகவும் பயங்கரமான உக்கிர நரசிம்மர் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளார். அவருடைய மடியின் மீது அரக்கன் ஹிரண்யகசிபுவின் வயிறு கிழிக்கப்பட்டு அவனுடைய குடலானது விக்ரஹ மேடை முழுவதும் சிதறிக் கிடக்கின்றது. ஒரு காலத்தில் அங்கு வழிபாட்டு முறைகள் மிகவும் உயர்ந்த நிலையில் இருந்தன. தினமும் திருவிழாக்களும் யானை ஊர்வலமும் இருப்பது வழக்கம். ஆனால் சிறிது சிறிதாக வழிபாட்டின் தரம் குறைய ஆரம்பித்தது. இன்று அந்த இடம் ஒரு பேய் நகரம் போல காட்சியளிக்கிறது. யாரும் அங்கு அமைதியுடன் வாழ முடியாது. இதைத்தான் அவர்கள் (இஸ்கான்) தங்களது திட்டத்தில் எதிர்பார்க்கிறார்களா?"

ஸ்தபதி பதிலளித்தார்: "அவர்கள் அதையே வலியுறுத்துகின்றனர். விக்ரஹத்தைப் பற்றிப் பேச அவர்கள் தொடர்ந்து என்னிடம் வருகின்றனர். கொள்ளையர்களின் பிரச்சனை இருப்பதே அவர்கள் நரசிம்மரை எதிர்பார்ப்பதற்கான காரணம்." விக்ரஹத்தின் வரைபடத்தை ஸ்தபதி தனது குருவிடம் வழங்க, அவரோ, "உக்கிர நரசிம்மரில் ஒன்பது வகைகள் உண்டு, அதில் இந்த நரசிம்மர் ஸ்தானு நரசிம்மர் என்னும் வகையைச் சார்ந்தவர். இவரைப் போன்ற விக்ரஹம் இந்த உலகத்தில் வேறு எங்குமே இல்லை, ஸ்வர்க லோகங்களில் உள்ள தேவர்கள்கூட இம்மாதிரி ஓர் உருவத்தை வழிபடுவது இல்லை. அவர்கள் விரும்பும் ஸ்தானு நரசிம்மர், தூணிலிருந்து வெளியே வருபவர், ஹிரண்யகசிபு அகப்படுவதற்கு முன்பு உள்ள தோற்றம். வேண்டாம். இந்த விக்ரஹத்தை நீ வடிவமைக்காதே, அஃது உனக்கு மங்களகரமானதாக இருக்காது. நான் பிறகு இதைப் பற்றி உன்னிடம் பேசுகிறேன்," என்று கூறி முடித்துக் கொண்டார்.

**இஸ்கானுக்காக நீ ஸ்தானு நரசிம்மரை வடிவமைத்துக் கொடுக்கலாம்—சங்கராசாரியர்.**

சில நாள்களுக்குப் பிறகு, அந்த ஸ்தபதியின் கனவில் தோன்றிய சங்கராசாரியர், "அவர்களுக்கு நீ ஸ்தானு நரசிம்மரை வடித்துக் கொடுக்கலாம்," என்று உரைத்தார். மறுநாள் காலை, மடத்திலிருந்து சங்கராசாரியர் கைப்பட எழுதிய கடிதம் ஒன்று வந்தது. அதில் கோவில் புதுப்பிப்பது பற்றிய சில விஷயங்கள் கூறப்பட்டிருந்தன. அக்கடிதத்தின் அடியிலிருந்த ஒரு குறிப்பில், "இஸ்கானுக்காக நீ ஸ்தானு நரசிம்மரை வடிவமைத்துக் கொடுக்கலாம்," என்று எழுதப்பட்டிருந்தது.

அக்கடிதத்தை இஸ்கான் பக்தரிடம் காட்டிய ஸ்தபதி, "எனக்கு என் குருவின் ஆசீர்வாதம் இருக்கின்றது. உங்களுக்கான விக்ரஹத்தை நான் வடிவமைத்துத் தருகிறேன்," என உறுதியளிக்க ஆத்ம தத்துவ தாஸ் மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்ந்தார். முன் தொகையை ஸ்தாபதியிடம் அளித்து, விக்ரஹத்தை வடிவமைத்து முடிக்க எவ்வளவு காலம் பிடிக்கும் என்று வினவினார். விக்ரஹம் ஆறு மாதத்திற்குள் பிரதிஷ்டை செய்யத் தயாராக இருப்பார் என்று ஸ்தபதி பதிலளிக்க, பக்தர் மாயாபூருக்குத் திரும்பினார்.

## கல்லைத் தேடும் படலம்

மாயாபூரில் நான்கு மாதங்களை அமைதியாகக் கழித்த ஆத்ம தத்துவர், தென்னிந்தியாவிற்குச் சென்று நரசிம்ம தேவரை வழிபடுவதற்குத் தேவையான கனமான பித்தளையால் செய்யப்பட்ட பூஜை சாமான்களை வாங்கிவிட்டு, விக்ரஹத்தையும் கொண்டுவர முடிவு செய்தார். அவரது பயணம் நல்ல முறையில் ஏற்பாடு செய்யப்பட்டு, ஸ்தபதியை சந்திக்கும்வரை எந்தப் பிரச்சனையும் இல்லாமல் இருந்தது. வழிபாட்டிற்குரிய எல்லா பூஜை சாமான்களும் வாங்கப்பட்டு விட்டன; விக்ரஹத்தை எடுத்துச் செல்ல வந்துள்ளதாக ஸ்தபதியிடம் கூற, அவர் அறிவற்றவனைப் பார்ப்பதுபோல ஆத்ம தத்துவரைப் பார்த்தார்: "விக்ரஹமா? நான் இன்னும் அதற்குத் தகுந்த கல்லைக்கூட கண்டுபிடிக்கவில்லையே!" தன் காதுகளை நம்ப முடியாத ஆத்ம தத்துவர், "ஆனால் ஆறு மாதத்தில் நரசிம்மர் தயாராகி விடுவார் என்று கூறினீர்களே!" என்று கேட்டார்.

"நான் என் வார்த்தையைக் காப்பாற்றுவேன், கல் கிடைத்த பின் ஆறு மாதத்திற்குள் நரசிம்மர் பிரதிஷ்டை செய்யத் தயாராகி விடுவார்." ஸ்தபதியின் பதில் அழுத்தம் திருத்தமாக இருந்தது. ஆனால் தாமதத்தை புரிந்துகொள்ளவோ ஒப்புக்கொள்ளவோ முடியாமல், விரக்தியில் மூழ்கிய பக்தர், "தென்னிந்தியா முழுவதும் நிறைய கருங்கற்கள் இருக்கின்றன. உங்களுக்கு கல் கிடைப்பதில் என்ன கஷ்டம்?" என்று சவால்விடும் தொனியில் வினவினார். ஸ்தபதியோ, "நான் உரல் செய்யவில்லை, விக்ரஹம் வடிக்கிறேன். விஷ்ணு விக்ரஹத்தை செய்ய உயிரோட்டமுள்ள கல்லைத்தான் பயன்படுத்த வேண்டும் என்று வேத நூல்கள் தெரிவிக்கின்றன. எந்தக் கல்லின் மீது ஏழு இடத்தில் தட்டினால், அவை ஒவ்வொன்றும் சாஸ்திரங்களில் கூறப்பட்ட சப்தத்தை எழுப்புமோ, அந்தக்

கல் பொருத்தமானதாக இருக்கலாம். அந்தக் கல்லில் உயிரோட்டம் உள்ளதா என்று பார்க்க, இரண்டாவது பரிசோதனை ஒன்றும் உள்ளது. கருங்கல்லை சாப்பிடும் பூச்சியானது கல்லின் ஒரு பகுதியிலிருந்து மறு பகுதிக்கு சாப்பிட்டுக் கொண்டே சென்று, சிறு தடயத்தை பின்னால் விட்டுச் சென்றால் இரண்டாவது பரிசோதனையிலும் வெற்றி பெற்றதாகக் கருதலாம். அதுவே உயிரோட்டமுள்ள கல். அதிலிருந்து பேசும் ஒலி அதிர்வுகள் வெளிப்படும். அதுபோன்ற கல்லில் இருந்துதான் உங்கள் நரசிம்மரை என்னால் வடிக்க முடியும். அவ்வாறு வடிக்கப்படும் சிலை, விக்ரஹத்திற்கான எல்லா அம்சங்களையும் வெளிப்படுத்துவதுடன், அழகாகவும் அமையும். தயவுசெய்து அமைதியாக இருங்கள். உங்களுக்காக ஆறு அடி கல்லை சிரத்தையுடன் தேடி வருகின்றேன்,'' என்று பதிலளித்தார்.

## பிரகலாதரின் விக்ரஹம்


ஆச்சரியத்தில் மூழ்கிய ஆத்ம தத்துவர், இவற்றை எவ்வாறு மாயாபூரில் உள்ளபக்தர்களிடம்விளக்குவதுஎன்பதை யோசித்தபடி, பிரகலாதரின் விக்ரஹமும் வேண்டும் என்பதை ஸ்தபதியிடம் எடுத்துரைத்தார். ''அது முடியும் என்று எனக்குத் தோன்றவில்லை,'' உண்மையைப் போட்டு உடைப்பதுபோல் ஸ்தபதி கூறினார். சற்று இடைவெளிக்குப் பின், சிரித்துக் கொண்டே தொடர்ந்தார்: ''நீங்கள் எல்லாவற்றையும் சாஸ்திரங்களில் உள்ளபடியே செய்ய விரும்புகிறீர்கள். உங்கள் நரசிம்மதேவர் நான்கு அடி உயரம் இருப்பார், பிரகலாதர் ஓர் எறும்பின் அளவில் இருப்பார்.''

அவரை இடைமறித்த ஆத்ம தத்துவர், ''ஆனால் எங்களுக்கு ஓரடி உயரமுள்ள பிரகலாதர் வேண்டும்,'' என்றார். ''சரி. அப்படியெனில் நரசிம்மர் 120 அடி உயரம் இருக்க வேண்டும்'' என ஸ்தபதி பதிலளிக்க, அவர்கள் இருவரும் முன்னுக்குப் பின்னாக பிரகலாதரின் அளவைப் பற்றி விவாதித்தனர். இறுதியில், ஸ்தபதி பெருமூச்சுடன் தன் நிலையை விட்டுக் கொடுத்து, ஓரடி உயர பிரகலாதரை வடிக்க ஒப்புக் கொண்டார்.

## நரசிம்மர் தயாராகுதல்

மாயாபூர் சென்ற ஆத்ம தத்துவர் இரண்டு மாதங்களுக்குப் பிறகு தென்னிந்தியா திரும்பினார். அங்கு எந்தவிதமுன்னேற்றமும்இல்லை. முப்பது அல்லது நாற்பது நாள்களுக்கு ஒருமுறை மாயாபூருக்கும் தென்னிந்தியாவிற்கும் வந்து போனார். இறுதியாக, கல் கண்டுபிடிக்கப்பட்டது, கல் கிடைத்தவுடன் ஸ்தபதி முழுவதும் மாறிவிட்டார். வீட்டில் சிறிது நேரத்தைத்தான் செலவழிப்பார்; நாள் கணக்கில் பல மணி நேரம் அவர் வெறுமனே அந்தக் கல்லைப் பார்த்தபடி உட்கார்ந்திருப்பார். அவர் கையில் சுண்ணாம்புக்குச்சி இருந்தது. ஆனாலும் அவர் எதையும் வரையவில்லை. அந்தக் கருங்கல்லின் வேண்டாத பகுதிகளைச் செதுக்கி அதனைச் செவ்வகமாகச் செய்வதைத் தவிர, அவருடைய வேலையாட்களையும் மேற்கொண்டு எதற்கும் அனுமதிக்கவில்லை.

அடுத்த முறை ஆத்ம தத்துவர் அவரைக் காணச் சென்ற போது, அந்தக் கல்லின் மீது ஸ்தபதி படம் வரைந்து வைத்திருந்தார்; அது மட்டுமே. மாயாபூரில் உள்ள மேலாளர்கள் பொறுமை இழப்பதால், பக்தர் மிகவும் கவலை கொண்டார். ''இந்த விக்ரஹம் ஆறு மாதங்களில் செய்து முடிக்கப்படும் என்று நீங்கள் நம்புகிறீர்களா?'' என



மாயாபூர் இஸ்கான் கோவிலின் முக்கிய பூஜாரிகளான அருட்திரு. பங்கஜாங்கிரி தாஸ், அருட்திரு. ஜானநிவாஸ தாஸ்

நம்பிக்கையின்றி அவர் ஸ்தபதியிடம் கேட்க, ‘‘கவலைப்பட வேண்டாம், இந்த வேலை முடிக்கப்படும்’’ என்று அவர் பதிலளித்தார்.

ஆத்ம தத்துவர் அடுத்த முறை வந்தபோது, அந்த ஸ்தபதி தானே விக்ரஹத்தினை, மிகவும் சிரத்தையான முறையில் பக்தியுடன் வடித்துக் கொண்டிருந்ததைக் கண்டார். அந்தக் கல் மாற்றம் பெற்று உருவம் தென்பட ஆரம்பித்திருந்தது. ஸ்தபதி அச்சமயத்தில் பகவானின் கைக்காப்புகளை வடிக்கத் தொடங்கினார், அதற்கு அவருக்கு இரண்டு வாரங்கள் ஆயிற்று. எல்லா அம்சங்களும் நுணுக்கமாகவும், மனதுக்கு மகிழ்ச்சியளிக்கக் கூடியவை யாகவும் இருந்தன.

## கூரையை எரித்த நரசிம்மர்

இறுதியில், விக்ரஹத்தை வடிக்க ஸ்தபதிக்கு பன்னிரண்டு மாதங்களுக்கும் அதிகமாகவே பிடித்தது. வேலை முடிந்தவுடன் அதனை உடனடியாகத் தெரிவிக்காமல், சில நாள்களுக்கு தன் நண்பர்களைக் காணச் சென்றுவிட்டார். அது மழைக் காலம் என்பதால், அங்கு அதிகமான பார்வையாளர்கள் கிடையாது. எனவே, ஓலையால் வேயப்பட்ட அந்த குடிசையைப் பூட்டி, நரசிம்மதேவரை பத்திரப்படுத்தி விட்டுச் செல்வது பாதுகாப்பானது என்று அவர் கருதினார். இரண்டு நாள்களுக்குப் பிறகு, அருகில் இருந்தவர்கள் அவரிடம் விரைவாக வந்து, ஓலைக் கொட்டகை தீப்பிடித்து விட்டதாகத் தெரிவித்தனர். மழைக் காலத்தில் தென்னை ஓலையால் வேயப்பட்ட கொட்டகை தீப்பற்றிக் கொண்டதை கேள்விப்பட்ட ஸ்தபதி ஆச்சரியத்துடன் உடனடியாக அங்கு விரைந்தார். ஆனால் கொட்டகை சாம்பலாகிவிட்டதையும், நரசிம்மதேவர் பாதிக்கப்படாமல் இருப்பதையும் அவர் கண்டார். உடனடியாக அவர் ஆத்ம தத்துவரை தொலைபேசியில் அழைத்தார்: ‘‘தயவுசெய்து இங்கு வந்து உங்கள் விக்ரஹத்தை எடுத்துச் செல்லுங்கள். நரசிம்மர் எல்லாவற்றையும் எரித்துக் கொண்டிருக்கிறார். அவர் இங்கிருந்து செல்ல முடிவு செய்து விட்டார்.’’

## நரசிம்மர் மாயாபூர் வருதல்

மகிழ்ச்சியில் தத்தளித்துப் போன ஆத்ம தத்துவர், உடனடியாக தென்னிந்தியாவிற்குப் பயணம் செய்து, ஒரு லாரியை ஏற்பாடு செய்து அதை பாதி மணலால் நிரப்பிக் கொண்டு ஸ்தபதியிடம் சென்றார். பகவான் நரசிம்மர் ஒரு கனமான உருவம் என்பதை மறந்துவிட்டார். நரசிம்மரோ ஒரு டன் எடை இருந்தார்! இரண்டு, மூன்று மணி நேரத்திற்குப் பிறகு, விக்ரஹத்தைப் பாதுகாப்பாக கொட்டகையில் இருந்து லாரிக்குக் கொண்டு சென்றனர். மாநில எல்லைகளைப் பாதுகாப்பாகக் கடந்து செல்ல, மத்திய விற்பனை வரி அலுவலர்களின் கையெழுத்திடப்பட்ட கடிதம், தொல்பொருள் கழகத்தின் இயக்குனர், தமிழக கலைக் களஞ்சியத்தின் இயக்குனர் ஆகியோரின் அனுமதிக் கடிதங்கள், மற்றும் காவல் துறையின் அனுமதியும் தேவைப்பட்டது. தேவையான கடிதங்களில் கையெழுத்திடுவதற்கு முன்பாக எல்லா அலுவலர்களும் விக்ரஹத்தைப் பார்வையிட வேண்டும் என்று தெரிவித்தனர். நரசிம்மதேவரின் தரிசனத்திற்குப் பிறகு அவர்கள் அனைவரும் நன்கு ஒத்துழைத்ததுடன் விரைவாகவும் செயல்பட்டனர். தேவையான எல்லாக் கடிதங்களும் அனுமதியும் 24 மணி நேரத்திற்குள் பக்தர்களின் கைக்குக் கிடைத்தன. சின்னஞ்சிறு விதிமுறைகளுக்கும், அரசாங்க வரைமுறைகளுக்கும் கட்டுப்பட்டு, தாமதப்படுத்துவதையே நோக்கமாகக் கொண்ட இந்திய அரசாங்க அலுவலகங்களின் இந்த வேகமான செயல்பாடு ஆச்சரியப்படக்கூடிய விஷயமாகவே பட்டது. மாயாபூருக்குத் திரும்பிச் செல்லும் பயணமும் வியக்கத்தக்க விதத்தில் பிரச்சனைகள் ஏதும் இல்லாமல் அமைதியாக இருந்தது. பக்தர்களின் பாதுகாவலரான நரசிம்மரே உடனிருந்த போது என்ன கவலை?

## பிரதிஷ்டை நிகழ்ச்சி

பொதுவாக விக்ரஹம் பிரதிஷ்டை செய்யும் நாளன்றுதான் ஸ்தபதி அங்கு வந்து விக்ரஹத்தின் கண்களைத் திறப்பார். ஆனால் நரசிம்மரின் ஸ்தபதியோ விக்ரஹத்தின் கண்களை ஏற்கனவே திறந்து விட்டிருந்தார். அவர் கண்களை மட்டும் திறக்கவில்லை, பிராண பிரதிஷ்டை, சிறு பூஜை, ஆரத்தி என எல்லாவற்றையும் செய்து முடித்திருந்தார். அதனால்தான் எல்லாக் கடிதங்களும் நமக்குக் கட்டுப்பட்டு, சாதகமான முறையில் தயாரிக்கப்பட்டன என்றும், பகவானைக் கொண்டு செல்வதும் மிகவும் சுலபமாக இருந்தது, என்றும் ஆத்ம தத்துவர் உணர்ந்தார்.

இதர சடங்குகளுடன் நரசிம்ம தேவரை பிரதிஷ்டை செய்தல் எளிய முறையில், 1986, ஜுலை 28 முதல் 30 வரை மூன்று நாட்கள் நீடித்தது. சங்கீர்த்தன இயக்கத்தின் பாதுகாவலரான பகவான் நரசிம்மதேவர் அன்று முதல் ஸ்ரீமாயாபூர் சந்திரோதய கோயிலில் பக்தர்களுக்குக் காட்சியளித்து அவர்களைப் பாதுகாத்து வருகிறார்.

உக்கிரம் நிறைந்தவராக விளங்கும் நரசிம்மர், பக்தர்களுக்கு கனிவானவர் என்பதை மாயாபூர் நரசிம்மர் நிரூபித்து வருகிறார். அனைத்து மிருகங்களையும் தனது கர்ஜனையாலேயே அச்சப்பட வைக்கும் சிங்கம், தனது குட்டிகளிடம் பரிவுடன் நடந்துகொள்வதைப் போல, அசுரர்களுக்கு அச்சத்தை விளைவிக்கும் நரசிம்மர், பக்தர்களைப் பரிவுடன் பாதுகாப்பவர். பக்தியில் இருக்கும் தடைகளைப் போக்க பக்தர்களுக்கு நரசிம்மர் உதவி வருகிறார், அவரை வழிபடுவோர் தங்களது பக்தியில் இருக்கும் தடைகள் நீங்கப் பெறுவதை எளிமையாக உணரலாம்.

*ஸ்ரீமதி தேவி தாஸி, இஸ்கான் மாயாபூரில் பல வருடங்களாக சேவை செய்து வருகிறார்.*

(தமிழாக்கம்: ஜெயகோவிந்தராம தாஸ்)




எப்போதும் என்னைப் பற்றி நினைத்து, எனது பக்தனாக ஆகி, என்னை வழிபட்டு, உனது வணக்கங்களை எனக்கு சமர்ப்பிப்பாயாக. இவ்வாறு நீ என்னை வந்தடைவாய் என்பதில் ஐயமில்லை. நீ எனக்கு மிகவும் பிரியமான நண்பன் என்பதால், இந்த சத்தியத்தை நான் உனக்கு அளிக்கின்றேன்.

—பகவத் கீதையில் (18.65) பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்










## கருத்து

தவறான பௌதிக அழகினால் கவரப்பட்டுள்ள நம் ஒவ்வொருவரின் நிலையும் இதுபோன்றதுதான். அழகான உடலைப் பெற்றிருந்தபோதிலும், இப்பெண்ணின் உடலும் மனமும் தற்காலிகமானதே, அவளோ அவற்றிலிருந்து வேறுபட்டவள். அவள் ஓர் ஆன்மீகப் பொறி. அவளது போலியான தோலினால் கவரப்பட்ட அந்த இளவரசனும் ஓர் ஆன்மீகப் பொறியே.

உண்மையற்ற வெளிப்புற அழகில் மயங்கியுள்ள ஜடவுலக அறிஞர்கள் ஆன்மீகப் பொறியினைப் பற்றி அறிவதில்லை. ஆன்மீகப் பொறி உண்மையானதும் அழகானதுமாகும். மலத்தினாலும் சதையினாலும் ஆன ஓர் உடல் எவ்வளவு அழகுடையதாக தோன்றினாலும், உண்மை அழகான ஆத்மா அந்த உடலை விட்டுச் சென்றபின்னர், அந்த உடலை எவ்வளவு அலங்கரித்தாலும் அதனை யாரும் தொட விரும்புவதில்லை.

உண்மையான அழகுடன் சம்பந்தமற்ற பொய்யான விஷயத்திலேயே நாம் அனைவரும் ஆர்வம் காட்டிக் கொண்டுள்ளோம். வெளித் தோலின் அழகினை பலமான மருந்தினை உட்கொண்டு சில மணி நேரத்தில் அழித்துவிட முடியும், ஆனால் உண்மையின் அழகோ அழியாதது, என்றும் ஒரே மாதிரி இருக்கக்கூடியது. அந்த உண்மையினை, ஆன்மீகப் பொறியினை என்றுமே அழிக்க இயலாது.


துரதிர்ஷ்டவசமாக, பௌதிக கலைஞர்களும் அறிஞர்களும் ஆன்மாவின் அத்தகு அழகிய தன்மையைப் பற்றியும், அந்த அழகிய ஆன்மீகப் பொறிக்கு ஆதாரமாக விளங்கும் நெருப்பைப் (கடவுளைப்) பற்றியும் அறியாமல் உள்ளனர், அந்த நெருப்பிற்கும் பொறிக்கும் இடையிலுள்ள தெய்வீக உறவுகளையும் அவர்கள் அறிவதில்லை.

பரம்பொருளின் அந்த தெய்வீக லீலைகள் கருணையுடன் இந்த ஜடவுலகினுள் நிகழ்த்தப்படும்போது, மேலே குறிப்பிட்ட மலமும் வாந்தியும் கலந்த உடலோடு அத்தகு லீலைகளை முட்டாள்கள் ஒப்பிடுகின்றனர். ஆன்மீகத்தின் இறுதி உண்மை, எல்லாரையும் கவரும் அழகிய நபரான கிருஷ்ணரே; அவரே மூல புருஷர், உலகிலுள்ள அனைத்திற்கும் ஆதாரம்.

அத்தகு அழகும் நித்தியத்தன்மையும் வாய்ந்த பரம்பொருளின் அம்சங்கள் என்பதால், மிகச்சிறிய ஆன்மீகப் பொறிகளான ஆத்மாக்களும், அழகிலும் நித்தியத் தன்மையிலும் பரம்பொருளை ஒத்துள்ளனர். பரம்பொருளுக்கும் ஆத்மாக்களுக்கும் உள்ள ஒரே வேறுபாடு என்னவெனில், அவர் என்றுமே முழுமையானவர், நாம் என்றுமே அவரது பகுதிகள்.

எல்லாவிதமான தர்மங்களையும் துறந்து, என்னிடம் மட்டுமே சரணடைவாயாக. உன்னை எல்லா பாவ விளைவுகளிலிருந்தும் நான் விடுவிக்கின்றேன், பயப்படாதே.

—பகவத் கீதையில் [18.66] பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்



# சாது சங்கம்

**கிருஷ்ணரின் மீதான கவர்ச்சியை எழுச்சி பெறச் செய்யும் பக்த சங்கம்**



அருளியவர்: ஜெயகோபிநாத தாஸ்

**பக்தித் தொண்டின் அறுபத்தி நான்கு அங்கங்களை ஸ்ரீல ரூப கோஸ்வாமி அவர்கள் தனது படைப்பான பக்தி ரஸாம்ருத சிந்துவில் குறிப்பிட்டுள்ளார், அவற்றிலுள்ள ஐந்து அங்கங்கள் (திருநாம உச்சாடனம், ஸ்ரீமத் பாகவதத்தை கேட்டல், வைஷ்ணவர்களின் சங்கம், விக்ரஹ ஆராதனை, மதுராவில் வசித்தல் ஆகியவை) மிகவும் சக்தி வாய்ந்தவை என்றும், அவற்றின் மீதான ஓரளவு பற்றுதலும் பக்திப் பரவசத்தை ஏற்படுத்தும் என்றும் அவர் கூறியுள்ளார்.**

சென்ற இதழ்களில், திருநாம உச்சாடனம், ஸ்ரீமத் பாகவதத்தை கேட்டல், விக்ரஹ ஆராதனை, மதுராவில் வசித்தல் ஆகியவற்றைக் கண்டோம். தற்போது, வைஷ்ணவர்களின் சங்கம் என்பது குறித்து அறியலாம்.

*'ஸாது-ஸங்க', 'ஸாது-ஸங்க'—*
*ஸர்வ-ஷாஸ்த்ரே கய*
*லவ-மாத்ர ஸாது-ஸங்கே*
*ஸர்வ-ஸித்தி ஹய*

''தூய பக்தரின் சங்கத்தை ஒரு க்ஷணம் பெற்றாலும் எல்லா சித்திகளையும் அடைய முடியும் என்று எல்லா வேத சாஸ்திரங்களும் உறுதியளிக்கின்றன.''

## யார் சாது?

பல போலி நபர்கள் காவி உடை தரித்து தன்னைத்தானே சாது/சந்நியாசி என்று பறைசாற்றிக் கொண்டு தகாத காரியங்களில் ஈடுபட்டு மாட்டிக் கொண்டிருக்கும் இக்கால கட்டத்தில் சாது சங்கத்தைப் பற்றிப் பேசினால் மக்கள் ஏற்றுக்கொள்ள தயக்கம் காட்டுகின்றனர். சாதுக்களின் மீது மக்களுக்கு உள்ள நம்பிக்கை சிதைந்து போயிருக்கும் இத்தருணத்தில் யார் சாது என்பதை உணர்த்த வேண்டியது மிகவும் அவசியமாகும். சாது என்பவர், காவி உடை அணிந்தவரோ, நீளமான தாடியுடையவரோ, ஊர் ஊராக சுற்றித்திரிபவரோ, பல நாள்கள் சாப்பிடாமல் உடல் ஒட்டிப் போயிருப்பவரோ, வாயிலிருந்து லிங்கம் எடுப்பவரோ, தொடுவதினால் நோயை குணப்படுத்துபவரோ அல்ல. யார் சாது என்பதை முறையாக அறியாமல், யாராவது ஒருவரை சாது என்று ஏற்றுக் கொண்டு, அதன்பின் அவரையே கடவுள் என்றும் ஏற்றுக் கொண்டு நாம் ஏமாற்றம் அடைந்தால், அதற்கு நாமே பொறுப்பாளிகள் ஆவோம். சாது சங்கம் மகத்தானதாக இருப்பினும், அதனை எடுத்துக் கொள்வதற்கு முன், 'யார் சாது' என்பதை தெரிந்து கொள்ள வேண்டும். வைரம் மகத்தானதுதான், ஆனால் அதனை வாங்குவதற்கு முன் அதுபற்றி தெரிந்து கொண்டு வாங்கச் செல்ல வேண்டும். இல்லையெனில், நாம் ஏமாற்றப்படுவது நிச்சயம். மக்கள் ஏமாறத் தயாராக இருக்கும் வரை ஏமாற்றுவதற்கு ஆட்கள் உருவாகுவார்கள். ஆகையால், யார் சாது என்பதை சாஸ்திரங்களிலிருந்து தெரிந்து கொள்ளுதல் அவசியம். ஒரு சாதுவானவர் (1) பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் மீது அசையாத நம்பிக்கையுள்ளவர் (2) திடமான பக்தித் தொண்டில் ஈடுபடுபவர் (3) கிருஷ்ணரைப் பற்றிய விஞ்ஞானத்தில் நிபுணர் (4) அங்கீகரிக்கப்பட்ட குரு சீடப் பரம்பரையில் வருபவர் (5) தன்னை கிருஷ்ணருடைய சேவகனாக பாவிப்பவர், மேலும். 6) தானே கடவுளென்று ஒருபோதும் பிரகடனப்படுத்தாதவர்.

ஸ்ரீமத் பாகவதத்தில் (3.25.21) சாதுவின் அடையாளங்கள் பின்வருமாறு கூறப்பட்டுள்ளன:

*திதிக்ஷவ: காருணிகா:*
*ஸுஹ்ருத: ஸர்வ-தேஹினாம்*
*அஜாத-ஷத்ரவ: ஷாந்தா;*
*ஸாதவ: ஸாது-பூஷனா:*

''பொறுமை, கருணை, எல்லா உயிரினங்களிடமும் நட்பு, எதிரிகளில்லாமை, சாஸ்திரங்களின்படி நடத்தல், அமைதி போன்றவை சாதுவின் அடையாளங்களாகும்.'' இவை மட்டுமின்றி சாது என்பவர், பகவானின் அன்புத் தொண்டில் இடைவிடாமல் எப்பொழுதும் ஈடுபடுபவராக இருத்தல் மிகவும் அவசியம். இதுவே சாதுவிற்கு உண்டான பரிட்சையாகும். (மேலும் விபரங்களுக்கு, பசுத்தோல் போர்த்திய புலிகள் என்னும் கட்டுரையைப் படிக்கவும்)

## சங்கம் எவ்வாறு எடுத்துக் கொள்வது

சங்கம் எடுத்துக் கொள்ளும்பொழுது நாம் நமது உணர்வுகளையும்

அனுபவங்களையும் மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்கிறோம். சாது சங்கத்தை ஏற்றுக்கொள்ளும்போது சாதுக்களின் உணர்வுகளையும் அனுபவங்களையும் பகிர்ந்து கொள்கிறோம். சங்கம் என்றால் மற்றவருக்கான அன்பை வளர்த்துக் கொள்ளுதல் என்று பொருள். குருவின் சங்கத்தை எடுத்துக் கொள்ளும் ஒரு சீடன், அந்த சங்கத்தை திடப்படுத்துவதற்கு நல்ல உறவு தேவை. நல்ல உறவை ஏற்படுத்துவதற்கான ஆறு விஷயங்களை மிகச்சிறந்த கௌடிய வைஷ்ணவ ஆச்சாரியரான ஸ்ரீல ரூப கோஸ்வாமி பிரபுபாதர் தனது படைப்பான உபதேசாமிருதத்தில் (ஸ்லோகம் 4) அழகாக கூறியிருக்கிறார்.

ததாதி ப்ரதிக்ருஹ்ணாதி
குஹ்யம் ஆக்யாதி ப்ருச்சதி
புங்க்தே போஜயதே சைவ
ஷட்-விதம் ப்ரீதி-லக்ஷணம்

“தானம் அளித்தல், தானம் பெற்றுக் கொள்ளுதல், மனதில் உள்ள இரகசியங்களை வெளிப்படுத்துதல், இரகசியங்களைக் கேட்டல், பிரசாதம் ஏற்றல், பிரசாதம் அளித்தல் ஆகிய ஆறுவிதமான செயல்கள், அன்பை வெளிப்படுத்தும் செயல்களாகும்.”

குருவிற்கும் சீடனுக்கும் உண்டான உறவில், ஒரு மாணவன் ஏதேனும் பொருளை அன்பளிப்பாக வழங்குகிறான், ஆனால் ஆசிரியர் ஏதேனும் அன்பளிப்பினை திருப்பித் தர வேண்டும் என்று அவன் எதிர்பார்ப்பதில்லை. ஆசிரியர் எப்படி, எதை மாணவனுக்குத் தருகிறார்? அவர் ஞானத்தை மாணவனுக்குத் தருகிறார்.

குரு சிஷ்ய உறவில் சீடன் குருவிற்கு பிரசாதம் கொடுக்க, அதனை குரு ஏற்றுக் கொள்கிறார். குரு தனது கருணையை மஹாபிரசாதமாக (குரு சாப்பிட்ட மீதம்) வழங்க, அதனை சீடன் ஏற்கிறான். தனது வாழ்வின் இரகசியங்களை குருவிடம் எடுத்துக்கூறி அதற்குண்டான தீர்வை சீடன் குருவிடமிருந்து பெறுகிறான். சீடனிடம் திருப்தியடைந்த குரு, சாஸ்திரத்தின் இரகசியங்களை சீடனுக்கு வெளிப்படுத்துகிறார். இதுவே உண்மையான சாது சங்கம்.

## எப்படிப்பட்ட சாது சங்கத்தை நிராகரிப்பது

ஸ்ரீமத் பாகவதத்திலுள்ள துருவ சரிதம் ஓர் அற்புதமான பகுதியாகும். ஐந்து வயது பாலகனாக இருந்த துருவன், தனது தந்தையின் மடியில் அமருவதற்கு விரும்பியபோது சிற்றன்னையினால் நிராகரிக்கப்பட்டான். மிகவும் சஞ்சலமடைந்த துருவன், தனது தந்தையைக் காட்டிலும் பாட்டனாரான பிரம்மாவைக் காட்டிலும் மாபெரும் இராஜ்ஜியத்தை அடைய வேண்டும் என்று உறுதி பூண்டான். அத்தகு இராஜ்ஜியத்தை அடைய தனது தாய் சுனிதியின் அறிவுரையின்படி, கடவுளைத் தேடி காட்டிற்குள் புகுந்தான். துருவனின் முயற்சியைகேள்விப்பட்டநாரதர்அவனது உறுதியை பரிசோதிக்க விரும்பினார். “நீ சிறுவனாக இருக்கின்றாய். இந்த காட்டிற்குள் அலைந்து திரியாமல் உன் வயதுச் சிறுவர்களோடு விளையாடச் செல். நீ இராஜ புத்திரன், உனது உடல் மிருதுவானது. காட்டில் கடவுளைத் தேடி அலைவது மிகவும் கடினமானது. நீண்ட தவம் செய்ய வேண்டியது அவசியம். வயது முதிர்ந்த பின்னர் நீ காட்டிற்கு வரலாம். இப்பொழுது வீட்டிற்குச் செல்,” என்று நாரதர் துருவனிடம் கூறினார். அதற்கு துருவன், “கடவுளை எப்படிக் காண்பது என்பதை உங்களால் எனக்கு உபதேசிக்க முடிந்தால்,



அன்பளிப்புகளை அளித்தல், அன்பளிப்புகளை பெற்றுக் கொள்ளுதல், பிரசாதம் ஏற்றல், பிரசாதம் அளித்தல், இரகசியங்களை (சாஸ்திர விஷயங்களை) கேட்டல், இரகசியங்களை வெளிப்படுத்துதல் ஆகிய ஆறு வழிகளில் சாது சங்கத்தை ஒருவரால் பெற்றுக் கொள்ள முடியும்.

கூறுங்கள். இல்லையெனில் என்னை மன்னியுங்கள்'' என்று கூறினான். இதன் மூலம் நாம் அறிவது என்னவெனில், சாதுவிடம் சங்கம் கொள்ளும்பொழுது, முழுமுதற் கடவுளான ஸ்ரீ கிருஷ்ணரின் நாமம், ரூபம், குணம், மற்றும்லீலைகளை கேட்டறிந்து கொள்ள வேண்டும். அத்தகு வசதியை ஏற்படுத்தாத சங்கத்தை தவிர்க்க வேண்டும். சாது சங்கத்தின் மூலம் நாம் பகவான் ஸ்ரீ கிருஷ்ணரை பார்ப்பதில் அதிக ஆர்வத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும். உண்மையான சாது சங்கத்தில் துருவனின் ஆர்வத்தை உறுதி செய்த நாரதர், துருவனுக்கு ஓம் நமோ பகவதே வாஸுதேவாய என்னும் மந்திரத்தை வழங்கினார்.

பாகவதத்தில் கொடுக்கப்பட்டுள்ள மற்றொரு நிகழ்ச்சியில், பிராமண சிறுவனின் வேடத்தில் வந்த பகவான் விஷ்ணுவிற்கு மூன்றடி நிலத்தை தானமளிக்க பலி மகாராஜர் முடிவு செய்த போது, அவர் தனது குருவான சுக்ராசாரியரால் தடுக்கப்பட்டார். பகவானின் சேவையிலிருந்து தன்னைத் தடுத்த காரணத்தினால், மாமன்னர் பலி தனது குருவையே நிராகரித்தார். எனவே, பகவானின் சேவையில் நம்மை ஈடுபடுத்தாமல், நானே கடவுள் என்று கூறிக்கொள்ளும் போலி சாதுக்களையும் அவர்களது சங்கத்தையும் முற்றிலுமாக நிராகரிக்க வேண்டியது அவசியம்.

## சாது சங்கத்தின் மகிமை

சாது சங்கத்தினால் எல்லாவித பக்குவத்தையும் அடைவோம் என்று அனைத்து வேத சாஸ்திரங்களிலும் கூறப்பட்டுள்ளது. இதற்குச் சான்றாக, ஸ்ரீமத் பாகவத புராணத்தில் பல்வேறு உதாரணங்களை நாம் காணலாம். பக்திவேதாந்திகளுக்கு (பக்தியில் சிறந்த பக்தர்களுக்கு) சேவை செய்த காரணத்தினால் வேலைக்காரியின் மகனாக இருந்த ஐந்து வயது சிறுவன், பக்தியில் மிகவுயர்ந்த நிலையை அடைந்து, தனது அடுத்த பிறவியில் நாரதராக அவதரித்தார். சாது சங்கத்தை கருவிலேயே கிடைக்கப்பெற்ற பிரகலாதர், பிற்காலத்தில் மாபெரும் பக்தராக உருவெடுத்தார். சமீப காலத்தில்கூட, அதாவது, 1960களில் ஹிப்பிகள் என்று அறியப்பட்ட அமெரிக்க இளைஞர்கள், சந்தோஷத்தை தேடி அலைந்த வண்ணம் இன்னவென்று சொல்ல முடியாத பல விதமான தீய செயல்களில் ஈடுபட்டு வந்தனர். அவர்களில் சில அதிர்ஷ்டசாலிகள், தற்காலத்தின் மாபெரும் ஆச்சாரியரான தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதரின் தொடர்பை பெற்றதால், இன்று சிறந்த பக்தர்களாக திகழ்வதையும், நமது அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தை வழிநடத்திச் செல்வதையும் நாம் கண்கூடாகப் பார்க்கின்றோம்.

## அன்றாட வாழ்வில் சாது சங்கம்

சாதுக்களின் சங்கமில்லையெனில் ஒருவர் பக்தியில் முன்னேற்றம் அடைவதென்பது இயலாத காரியம். இஸ்கான் கோவில்களில் தினசரி நடைபெறும் ஸத்சங்க நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதன் மூலம் மிகச்சிறந்த பலனை அடைய முடியும். கோவிலிலிருந்து தொலைவில் வசிப்பவர்கள் குறைந்தது வாரத்திற்கு ஒருமுறையாவது கோவிலுக்குச் சென்று அங்கு வசிக்கக்கூடிய பக்தர்களுடனும் வருகை தரும் இதர பக்தர்களுடனும் சங்கம் பெற்று ஆன்மீக வாழ்வில் முன்னேற்றமடைய முடியும்.

**ஜெய கோபிநாத தாஸ்** B.E, அவர்கள் இஸ்கானின் சென்னை கிளையில் முழு நேர பிரம்மச்சாரியாக தொண்டாற்றி வருகிறார்.



வேலைக்காரியின் மகனாக இருந்த ஒரு சிறுவன், பக்தியில் சிறந்த வேதாந்திகளுடன் சங்கம் கொண்டதால், தனது அடுத்த பிறவியில் நாரதராக உயர்வு பெற்றார்.

# பக்தனுக்கும் மற்றவர்களுக்கும் உள்ள வேறுபாடு

தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர், தனது சீடர்கள் சிலருடன் காலை நடைபயிற்சியின் போது நிகழ்த்திய உரையாடல் (1974 ஜுன், ஜெனிவா).



**சீடர்:** ஆசைப்படக் கூடாது என்று பகவத் கீதையில் கிருஷ்ணர் சொல்லும் போது, அவர் எதனைக் குறிப்பிடுகிறார்?

**ஸ்ரீல பிரபுபாதர்:** அவருக்குத் தொண்டு செய்வதற்கு மட்டுமே நாம் ஆசைப்பட வேண்டும் என்பதையே அவர் அங்கு குறிப்பிடுகிறார். ஸ்ரீ சைதன்ய மஹாபிரபு, ந தனம் ந ஜனம் ந ஸுந்தரீம் கவிதாம் வா ஜகத்-ஈஷ காமயே, ‘‘தனம் வேண்டேன், ஜனம் வேண்டேன், அழகிய பெண்களும் வேண்டேன்’’ என்று கூறினார். அப்படியெனில், அவர் வேண்டுவது என்ன? ‘‘நான் வேண்டுவதெல்லாம் கிருஷ்ண சேவை மட்டுமே’’ என்கிறாரே தவிர, ‘‘எனக்கு இது வேண்டாம், அதுவும் வேண்டாம். நான் சூன்யமாகிவிடுகிறேன்,’’ என்று அவர் கூறவில்லை.

**சீடன்:** பக்தனல்லாதவனும் தனக்கு என்ன வேண்டும் என்பதை அறிந்துள்ளதாகக் கூறுகிறான். ஆனால், ‘‘அந்த நல்ல முடிவுகளை அடைய எனக்கு கிருஷ்ணர் தேவையில்லை’’ என்றும் சொல்கிறான்.

**ஸ்ரீல பிரபுபாதர்:** அப்படியெனில், அவன் ஒரு முட்டாள். நல்ல முடிவுகள் என்பதன் உண்மையான பொருளை அவன் அறியவில்லை. இன்று ஒருவகையான ‘‘நல்ல முடிவுக்கு’’ அவன் மிகவும் கஷ்டப்பட்டு உழைக்கின்றான். ஆனால் அவனது விருப்பம் நாளை மாறிவிடும். மரணத்தின் போது அவன் தனது உடலை மாற்றித்தானே ஆக வேண்டும். சில சமயம் நாயின் உடலை எடுத்து ஒருவகையான ‘‘நல்ல முடிவுக்கு’’ ஆசைப்படுவான். மற்றொரு சமயம் தேவர்களின் உடலை எடுத்து வேறுவகையான ‘‘நல்ல முடிவுக்கு’’

ஆசைப்படுவான். பிரமதாம் உபர்-யத:, அவன் பிரபஞ்சத்தில் மேலும் கீழுமாக சக்கரம்போலச் சுற்றுகிறான். அந்த சக்கரத்தின் பெயர் என்ன?

**சீடர்:** இராட்டினம்.

**ஸ்ரீல பிரபுபாதர்:** ஆம். சில சமயங்களில் அவன் மேலான நிலைக்கு உயருகின்றான், மீண்டும் அவன் கீழ்நிலைக்கு வந்து பன்றி அல்லது நாயைப் போன்ற உடலை அடைவது உறுதி. இஃது எப்போதும் நடந்து கொண்டே இருக்கும்.

*ப்ரஹ்மாண்ட ப்ரமிதே கோண*
*பாக்யவான் ஜீவ*
*குரு-க்ருஷ்ண-பிரஸாதே பாய*
*பக்தி-லதா-பீஜ*

"பிரபஞ்சத்திலுள்ள மேலுலகங்களுக்கும்



கீழுலகங்களுக்கும் பற்பல பிறவிகளாக அலைந்து திரிந்த பின்னர், எவனொருவன் அதிர்ஷ்டசாலியோ, அவன் ஆன்மீக குருவின் கருணையினாலும் கிருஷ்ணரின் கருணையினாலும் பக்தித் தொண்டிற்கு வருகிறான்." (சைதன்ய சரிதாம்ருதம், மத்திய லீலை 19.151)

**சீடர்:** இருக்கலாம். ஆனால் பக்தனல்லாதவனோ, "நாங்களும் நல்ல செயல்களைத்தான் செய்கின்றோம். நீங்கள் மற்றவர்களுக்கு உணவளிப்பது போல நாங்களும் உணவளிக்கிறோம். நீங்கள் பள்ளிகளைத் திறப்பதுபோல நாங்களும் பள்ளிகளைத் திறக்கிறோம்" என்று கூறுவான்.

**ஸ்ரீல பிரபுபாதர்:** ஆனால் நாங்கள் கிருஷ்ண உணர்வை போதிக்கும் பள்ளிகளைத் திறக்கின்றோம், உங்களது பள்ளிகளோ மாயையை கற்றுக் கொடுக்கின்றன. பிரச்சனை என்னவெனில், இந்த அயோக்கியர்களால் *பக்தி* என்பதற்கும் *கர்மம்* (பௌதிக செயல்) என்பதற்கும் உள்ள வேறுபாட்டினை புரிந்துகொள்ள முடிவதில்லை. பக்தியானது கர்மத்தை போலத் தோன்றினாலும், அது *கர்மம்* அல்ல. பக்தி நெறியிலுள்ள நாம் கிருஷ்ணரின் திருப்திக்காக வேலை செய்கிறோம். இதுவே இரண்டிற்கும் உள்ள வேறுபாடாகும்.





உதாரணமாக, குருக்ஷேத்திர யுத்தத்தில் போரிட்ட அர்ஜுனன், அச்செயலை கிருஷ்ணருக்காக செய்ததால், சிறந்த பக்திமானாக ஏற்றுக்கொள்ளப்படுகிறான். கிருஷ்ணர் அவனிடம், *பக்தோ (அ)ஸி மே... ப்ரியோ (அ)ஸி மே* (பகவத் கீதை 4.3), "அர்ஜுனனே, நீ எனது மிகவும் பிரியமான பக்தன்" என்று கூறினார். அர்ஜுனன் அப்படி என்ன செய்தான்? அவன் சண்டையிட்டான், அவ்வளவுதான். ஆனால்

அவன் கிருஷ்ணருக்காக சண்டையிட்டான். அதுவே இரகசியம். போர் வீரன் என்னும் தகுதியை அர்ஜுனன் மாற்றவில்லை, ஆனால் தனது மனப்பான்மையைமாற்றிக்கொண்டான். போர் தொடங்குவதற்கு முன், “நான் ஏன் எனது உறவினர்களைக் கொல்ல வேண்டும்? இந்த யுத்த களத்தை விட்டு வனத்திற்குச் சென்று சாதாரண ஆண்டியாகிவிடலாம்” என்று நினைத்தான். ஆனால் கிருஷ்ணரோ அவன் போரிட வேண்டும் என்று விரும்பினார், இறுதியில் கிருஷ்ணரிடம் சரணடைந்த அர்ஜுனன், கிருஷ்ணரின் தொண்டாக போர் புரிந்தான். அவன் தனது சொந்த புலனின்பத்திற்காக அல்லாமல், கிருஷ்ணரது புலனின்பத்திற்காக போரிட்டான்.

**பக்தர்:** அப்படியெனில், பக்தித் தொண்டிலும் புலனின்பம் உண்டா?


**ஸ்ரீல பிரபுபாதர்:** ஆம். கர்மியொருவன் தனது சொந்த புலனின்பத்திற்காக வேலை செய்கிறான். பக்தனோ கிருஷ்ணரின் புலனின்பத்திற்காக வேலை செய்கிறான். இதுவே பக்தனல்லாதவனுக்கும் பக்தனுக்கும் உள்ள வேறுபாடாகும். புலனின்பம் என்பது இரண்டு வழிகளிலும் உண்டு. ஆனால் நீங்கள் உங்களுடைய சொந்த புலனின்பத்திற்காக வேலை செய்தால், அது கர்மம் என்றும்; கிருஷ்ணரின் புலனின்பத்திற்காக வேலை செய்தால், அது பக்தி என்றும் கூறப்படுகிறது. பக்தியும் கர்மமும் ஒரேமாதிரி தோன்றலாம், ஆனால் தரத்தில் வேறுபட்டவை.

கோபியரின் நடத்தைகளை மற்றொரு உதாரணமாக எடுத்துக் கொள்ளலாம். கிருஷ்ணரின் மிக அழகான வாலிபத்தினால் கோபியர்கள் வசீகரிக்கப் பட்டனர். அவர்கள் கிருஷ்ணரை காதலராகக் கொள்ள விரும்பியதால், அவருடன் நடனமாடுவதற்காக நள்ளிரவில் தங்களது வீட்டை விட்டுச் சென்றனர். இதனால் அவர்கள் ஏதோ பாவச் செயலில் ஈடுபட்டதுபோல் தோன்றும்—ஆனால் அவர்கள் செய்தது பாவமல்ல; ஏனெனில், அவர்களது செயல் கிருஷ்ணரை மையமாகக் கொண்டது. எனவே, சைதன்ய மஹாபிரபு, *ரம்யா காசித் உபாஸனா வ்ரஜவதூ-வர்கேண யா கல்பிதா*, “கிருஷ்ணரை பூஜிக்க கோபியர்கள் கடைபிடித்த வழிமுறையைக் காட்டிலும் சிறப்பான வழி வேறெதுவும் இல்லை” என்று பரிந்துரைக்கிறார்.

ஆனால், அயோக்கியர்களோ, “ஓ, இது மிகவும் அருமை. கிருஷ்ணர் நள்ளிரவில் அடுத்தவர்களின் மனைவியருடன் நடனமாடினார். நாமும் சில பெண்களை வரவழைத்து நடனமாடி கிருஷ்ணரைப் போல மகிழ்வோம்” என்று எண்ணுகின்றனர். அத்தகு எண்ணம், கிருஷ்ணர் கோபியருடன் நடத்திய லீலைகளைப்







**இடது புறம்:** சொந்த புலனின்பத்திற்காக வேலை செய்யும் கர்மியின் எண்ணங்கள்
**வலது புறம்:** கிருஷ்ணரின் புலனின்பத்திற்காக வேலை செய்யும் பக்தனின் எண்ணங்கள்

பற்றிய மிகவும் தவறான கருத்தாகும். இதுபோன்ற தவறான கருத்துகளைப் போக்கவே ஸ்ரீல வியாசதேவர் (ஸ்ரீமத் பாகவதத்தின் ஆசிரியர்) கிருஷ்ணரே புருஷோத்தமரான முழுமுதற் கடவுள் என்பதை விளக்குவதற்கு பாகவதத்தின் ஒன்பது காண்டங்களை அர்ப்பணித்துள்ளார். அதன் பின்னரே அவர் கோபியருடனான கிருஷ்ணரின் லீலைகளைப் பற்றி வர்ணிக்கின்றார். ஆனால் அயோக்கியர்களோ கோபியருடனான கிருஷ்ணரின் லீலைகளைப் படிக்க நேரடியாக பத்தாவது காண்டத்திற்குத் தாவுகின்றனர். இவ்வாறு அவர்கள் *ஸஹஜியர்களாக* (கிருஷ்ணரைப் போல நடிப்பவர்களாக) ஆகின்றனர்.

**சீடர்:** அப்படிப்பட்டவர்கள் ஏதோ ஒரு விதத்தில் கிருஷ்ணருடன் தொடர்பு கொள்கின்றனர் என்பதால், அவர்களின் இதயத்தில் மாற்றம் ஏற்பட வாய்ப்பு உண்டா?

**ஸ்ரீல பிரபுபாதர்:** இல்லை. கம்சன்கூட கிருஷ்ணருடன் தொடர்பு கொண்டான், ஆனால் விரோதியாகத்தான் பழகினான். அது பக்தி அல்ல. பக்தி என்பது, *ஆநுகூல்யேன கிருஷ்ணாநு-ஷீலனம்,* அதாவது, கிருஷ்ணருக்கு அனுகூலமான விதத்தில் இருக்க வேண்டும். கிருஷ்ணரைப் போல நடிக்கவோ கிருஷ்ணரைக் கொல்லவோ முற்படக் கூடாது. அதுவும் கிருஷ்ண உணர்வே, ஆனால் அஃது அனுகூலமான தொண்டு அல்ல என்பதால், அது பக்தி ஆகாது. இருப்பினும், ஏதாவது ஒரு முறையில் கிருஷ்ணரைப் பற்றி நினைவுகொள்வதால், கிருஷ்ணரது எதிரிகளும் முக்தியடைகின்றனர். அவர்கள் அருவ பிரம்ம முக்தியைப் பெற்றாலும், ஆன்மீக உலகத்தில் கிருஷ்ணருடனான லீலைகளில் நுழைவதற்கு அனுமதிக்கப்படுவதில்லை. அந்த பெறற்கரிய வாய்ப்பு, கிருஷ்ணருக்கு தூய அன்புடன் பக்தித் தொண்டினை பயிற்சி செய்பவர்களுக்கு மட்டுமே உரித்தானதாகும்.

# வாழ்வை மாற்றிய பகவத் கீதை

## இந்தோனேஷியாவில் நிகழ்ந்த ஒரு சம்பவம்

இந்தோனேஷியாவில் உள்ள பலி என்னும் சிறிய தீவில் 40 இலட்சம் மக்கள்தான் வாழ்ந்து வருகின்றனர் என்றபோதிலும், அங்கு நாலாயிரம் பக்தர்கள் உள்ளனர், அவர்களில் பலர் மிகவும் ஆர்வத்துடன் புத்தக விநியோகத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அங்கு வங்கி ஆலோசகராக வேலை செய்பவரும் புத்தக விநியோகத்தில் ஈடுபடுபவருமான பத்ம லோசன பிரபுவின் வீட்டில் நான் தங்கியிருந்தபோது, அவரது புத்தக விநியோக அனுபவம் ஒன்றினை என்னுடன் பகிர்ந்து கொண்டார்.

ஒருமுறை நாள் முழுக்க புத்தக விநியோகத்தில் ஈடுபட்ட பின்னர், பத்ம லோசனர், மாலை நேரத்தில் வீட்டிற்குத் திரும்ப முடிவு செய்தார். ஆனால் ஏதோ ஒரு சக்தி அவரை கடற்கரையை நோக்கி ஈர்த்தது. மணலில் உட்கார்ந்தபடி, கடலை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்த ஒருவரை அவர் கவனித்தார். அவரிடம் சென்ற பத்ம லோசனர், “என்னிடம் சில உயர்ந்த பொருள்கள் உள்ளன; தங்களுக்குப் பிடிக்கும் என்று நம்புகிறேன். தங்களைப் பார்த்தால் ஆழ்ந்த சிந்தனையில் இருப்பதுபோலத் தோன்றுகிறது” என்றார். அந்த மனிதர் கவனிப்பதாகத் தோன்ற, பத்மர் உடனடியாக பகவத் கீதையை அவரிடம் நீட்டினார். அவர் புத்தகத்தை ஆர்வத்துடன் பார்க்க, பத்மர் பகவத் கீதையின் செய்திகளை விளக்கத் தொடங்கினார். அவரோ பத்மரை ஏறெடுத்துக்கூட பார்க்கவில்லை; சொல்வதை கேட்டுக் கொண்டே ஆர்வத்துடன் புத்தகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார். சில நிமிடங்களுக்குப் பின், கீதையை வாங்கிவிட்டு அதற்குரிய பணத்தைக் கொடுத்தார். அருகிலிருந்த கோவிலுக்கு வரும்படி அவருக்கு அழைப்புவிடுத்த பின்னர், பத்மர் அங்கிருந்து சென்றுவிட்டார்.

அன்றிரவே கோவிலுக்குச் சென்ற அவர், அங்கிருந்த பக்தர்களிடம், “ஆன்மீக வாழ்வில் முன்னேற நான் வேறு என்ன செய்ய வேண்டும்?” என்று வினவினார். ஹரே கிருஷ்ண மஹாமந்திரத்தை ஜபிக்கும்படி பக்தர்கள் அவருக்கு அறிவுரை வழங்க, ஹரே கிருஷ்ண மந்திர ஜபத்தை ஏற்றுக் கொண்டார். தற்போது ஒரு வருடம் கழிந்துவிட்டது; அவர் 16 மாலைகள் ஜபம் செய்வதோடு தீட்சை வாங்கவும் விரும்புகின்றார்.

சமீபத்தில் தனது வாழ்வின் இரகசியங்களை அவர் பத்மரிடம் தெரிவித்தார்: “பகவத் கீதையை தங்களிடம் இருந்து பெறுவதற்கு முன்பு எனது வாழ்க்கை மிகவும் மோசமாக இருந்தது. சூதாட்டத்திற்கு அடிமையாகி எனது இரு வீடுகளையும் இழந்திருந்தேன். குடிப்பழக்கமும் இதர போதை வஸ்துக்களும் எனக்கு இரத்த இருமலை வரவழைத்தன. நாற்பது வயதே ஆன என்னிடம், “உன்னுடைய வாழ்வை மாற்றாவிடில், நீ ஆறு மாதங்கள் மட்டுமே உயிர் வாழ்வாய்,” என்று மருத்துவர் கூறியிருந்தார். அத்தகு மன அழுத்தத்துடன் குழம்பிய நிலையில் என்ன செய்வதென்று அறியாமல் கடற்கரையில் நான் அமர்ந்திருந்தபோதுதான் தங்களைச் சந்தித்தேன். கிருஷ்ணரை எனது வாழ்க்கையில் தாங்கள் அறிமுகப் படுத்தினீர்கள். அதனால் நான் காப்பாற்றப் பட்டு விட்டேன். தற்போது நான் மிகவும் மகிழ்ச்சியாக உள்ளேன். தங்களது உதவிக்கு மிக்க நன்றி.”

வழங்கியவர்: விஜய தாஸ்

# ஸ்ரீமத் பாகவதம்

வேத இலக்கியங்கள் என்னும் மரத்தின் பழுத்த பழமாகக் கருதப்படும் ஸ்ரீமத் பாகவதமே வேத ஞானத்தின் பூரணமான அங்கீகரிக்கப்பட்ட சாஸ்திரமாகும். சுமார் ஐயாயிரம் வருடங்களுக்கு முன்பு தொகுக்கப்பட்ட இந்த வரலாற்றுக் காவியம், மாமுனிவரான கிருஷ்ண துவைபாயன வியாசரால் அவர் எழுதிய வேதாந்த சூத்திரத்திற்கு அவரே வழங்கிய விளக்கவுரையாகும். அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் ஸ்தாபக ஆச்சாரியரான தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர் அவர்கள் பன்னிரண்டு காண்டங்கள் கொண்ட அந்த மாபெரும் காவியத்திற்கு பதினெட்டு பெரும் புத்தகங்களில் விளக்கமளித்துள்ளார். அப்புத்தகத்தினை இப்பத்திரிகையின் ஒவ்வொரு வெளியீட்டிலும் தொடர்ந்து பிரசுரித்து வருகிறோம்.

## சாதுக்களின் கேள்விகள்

### முதல் காண்டம், ஸ்லோகம் இரண்டு

தர்ம ப்ரோஜ்ஜித-கைதவோ (அ)த்ர பரமோ நிர்மத்ஸராணாம் ஸதாம்
வேத்யம் வாஸ்தவம் அத்ர வஸ்து ஷிவதம் தாப-த்ரயோன்மூலனம்
ஸ்ரீமத்-பாகவதே மஹா-முனி-க்ருதே கிம் வா பரைர் ஈஷ்வர:
ஸத்யோ ஹ்ருத் யவருத்யதே (அ)த்ர க்ருதிபி: ஷுஷ்ருஷுபிஸ்
தத்-க்ஷணாத்

### மொழிபெயர்ப்பு

பௌதிக நோக்கங்களைக் கொண்ட எல்லா தர்மங்களையும் முற்றிலும் புறக்கணித்து, மிகவுயர்ந்த உண்மையை இந்த பாகவத புராணம் விவரிக்கின்றது. துளியும் களங்கமற்ற தூய்மையான இதயத்தை உடைய பக்தர்களால் இது புரிந்துகொள்ளப்படக்கூடியது. அந்த மிகவுயர்ந்த உண்மை, மாயையிலிருந்து முற்றிலும் வேறுபட்ட பூரண உண்மையாகும், இஃது அனைவருக்கும் நன்மையளிக்கக் கூடியது. மூவகைத் துன்பங்களை வேரோடு அழிக்கவும் செய்கின்றது. மாமுனிவரான வியாசதேவரால் (அவரது பக்குவப்பட்ட நிலையில்) தொகுக்கப்பட்டதான இந்த அழகிய பாகவதம் ஒன்றே இறையுணர்வை உண்டாக்கப்போதுமானதாகும். அவ்வாறு இருக்கையில், வேறு சாஸ்திரத்திற்கு அவசியம் உண்டோ? பாகவதத்தின் செய்தியை கவனத்துடனும் பணிவுடனும் கேட்ட மாத்திரத்தில், அறிவை வளர்க்கும் இம்முறையினால், ஒருவரின் இதயத்திற்குள் பரம புருஷர் உடனடியாக நிலைநிறுத்தப்படுகின்றார்.

### பொருளுரை

புண்ணியச் செயல்கள், பொருளாதார முன்னேற்றம், புலன்களின் திருப்தி, இறுதியில், ஜடப் பிணைப்பிலிருந்து விடுதலை ஆகிய நான்கு முக்கியமான விஷயங்களை உள்ளடக்கியதே தர்மம் எனப்படும். அதர்மமான வாழ்க்கை அநாகரிகமான நிலையாகும். உண்மையில், தர்மம் எப்போது தொடங்குகின்றதோ அப்போதுதான் மனித வாழ்வும் தொடங்குகின்றது. உண்ணுதல், உறங்குதல், பயப்படுதல், உடலுறவு கொள்ளுதல் ஆகியவை மிருக வாழ்வின் நான்கு அடிப்படைக் கொள்கைகளாகும். இவை மிருகங்களுக்கும் மனிதர்களுக்கும் பொதுவானவை. ஆனால் தர்மம் என்பது மனித வாழ்வின் சிறப்புத் தன்மையாகும். தர்மம் இல்லாவிடில், மனித வாழ்வு மிருக வாழ்வை விட மேலானதல்ல. ஆகவே, தன்னுணர்வை குறிக்கோளாகக் கொண்டதும், பகவானுடனான மனிதனின் நித்திய உறவை உணர்த்தக் கூடியதுமான ஒரு வகை தர்மங்கள் மனித சமுதாயத்தில் உள்ளன.

தாழ்ந்த நிலைகளிலுள்ள மனித நாகரிகத்தில், ஜட இயற்கையை அடக்கியாள்வதற்கான போட்டி எப்போதுமே இருந்து வருகிறது. வேறு விதமாகக் கூறினால், புலன்களைத் திருப்தி செய்வதற்கான போட்டி தொடர்ந்து இருந்து வருகிறது. இத்தகு உணர்வால் உந்தப்பட்டு, மனிதன் தர்மத்தை நோக்கித் திரும்புகிறான். இவ்வாறாக, புண்ணிய செயல்கள் அல்லது மதச் சடங்குகளை பௌதிக இலாபத்தைப் பெறுவதற்காக அவன் செய்கிறான். ஆனால், அத்தகு பௌதிக இலாபங்களை வேறு வழிகளில் அடைய முடிந்தால், பெயரளவிலான அந்த தர்மம் புறக்கணிக்கப்படுகின்றது. நவீன நாகரிகத்தின் சூழ்நிலை இதுவே. மனிதன் பொருளாதாரத்தில் முன்னேறி வருவதால், தற்போது அவன் மதத்தில் அதிக ஆர்வமுள்ளவனாக இல்லை. தேவாலயங்களும், பள்ளிவாசல்களும், கோவில்களும் இப்போதெல்லாம் பெரும்பாலும் காலியாகவே உள்ளன. மனிதர்கள், தங்களது முன்னோர்களால் எழுப்பப்பட்ட சமய ஸ்தலங்களைவிட, தொழிற்சாலைகள், கடைகள், திரைப்படங்கள் போன்றவற்றில் அதிக ஆர்வம் காட்டுகின்றனர். மதம் என்பது பொருளாதார இலாபத்திற்காக மேற்கொள்ளப்படுவதை இது நிரூபிக்கின்றது. பொருளாதார இலாபங்கள், புலனுகர்ச்சிக்குத் தேவைப்படுகின்றன. அத்தகு புலனின்ப வேட்கையில் ஒருவன் தோல்வியுறும்போது, அவன் முக்திக்கான வழியைப் பின்பற்றி பரம்பொருளுடன் ஐக்கியமாவதற்கு முயற்சி செய்கிறான். இவ்வாறாக, இந்நிலைகள் அனைத்துமே பல தரப்பட்ட புலனுகர்ச்சிகளே.

வேதங்களில், மேலே குறிப்பிட்ட நான்கு செயல்களும் பல்வேறு விதிமுறைகளுடன் கொடுக்கப்பட்டுள்ளதால், புலனின்பத்திற்கான மிதமிஞ்சிய போட்டி ஏற்படாது. ஆனால், ஸ்ரீமத் பாகவதம், இத்தகு புலனின்பச் செயல்கள் அனைத்திற்கும் அப்பாற்பட்டதாகும். புலனின்ப போட்டிகளுக்கு அப்பாற்பட்ட பகவானின் தூய பக்தர்களால் மட்டுமே புரிந்துகொள்ளக்கூடிய

இந்த ஸ்ரீமத் பாகவதம், முற்றிலும் தெய்வீகமான சாஸ்திரமாகும். இந்த பௌதிக உலகில் மிருகத்திற்கும் மிருகத்திற்கும் இடையில், மனிதனுக்கும் மனிதனுக்கும் இடையில், சமுதாயத்திற்கும் சமுதாயத்திற்கும் இடையில், தேசத்திற்கும் தேசத்திற்கும் இடையில் என தீவிரமான போட்டி நடக்கின்றது. ஆனால் பகவானின் பக்தர்களோ அத்தகு போட்டிகளைக் கடந்த உயர்ந்த நிலையில் உள்ளனர். அவர்கள் பௌதிகவாதிகளுடன் போட்டியிடுவதில்லை; ஏனெனில், அவர்கள் முழுமுதற் கடவுளிடம் திரும்பிச் செல்வதற்கான பாதையில் உள்ளனர், அங்குள்ள வாழ்க்கை நித்தியமானதும் ஆனந்தமயமானதுமாகும். இத்தகு ஆன்மீகவாதிகள் பொறாமை இல்லாதவர்கள், தூய இதயம் கொண்டவர்கள். இந்த ஜடவுலகிலுள்ள ஒவ்வொருவனும் மற்றவனிடம் பொறாமை கொண்டவனாக இருப்பதால், இங்கு போட்டி ஏற்படுகின்றது. ஆனால், பகவானின் திவ்யமான பக்தர்களோ பௌதிக பொறாமையிலிருந்து விடுபட்டிருப்பது மட்டுமின்றி, அனைவரின் நலனிலும் அக்கறை காட்டுகின்றனர். மேலும், கடவுளை மையமாகக் கொண்ட போட்டிகளற்ற சமூகத்தை நிலைநாட்ட அவர்கள் பாடுபடுகின்றனர். போட்டிகளற்ற சமுதாயம் குறித்த தற்கால பொதுவுடமைவாதிகளின் எண்ணங்கள் செயற்கையானவை; ஏனெனில், பொதுவுடமைவாத தேசத்திலும் சர்வாதிகாரி பதவிக்குப் போட்டி இருக்கின்றது. வேதக் கண்ணோட்டத்தில் பார்த்தாலும் சரி, சாதாரண மனிதனின் செயல்களை வைத்துப் பார்த்தாலும் சரி, புலனின்பமே ஜட வாழ்வின் அடிப்படை என்பது தெளிவாகும். வேதங்களில் மூன்று வழிகள் குறிப்பிடப்பட்டுள்ளன. ஒன்று, பலன்நோக்குச் செயல்களைக் கொண்டு உயர் கிரகங்களுக்கு ஏற்றம் பெறுதல். அடுத்தது, தேவர்களை வழிபட்டு தேவர்களின் லோகங்களுக்கு ஏற்றம் பெறுதல். மற்றது, பரம்பொருளையும் அவரது அருவ நிலையையும் உணர்ந்து அவருடன் ஐக்கியமாகுதல்.

அருவ நிலை பரம்பொருளின் தன்மைகளில் உயர்ந்ததல்ல. அருவ நிலையைக் காட்டிலும் பரமாத்மா நிலை உயர்ந்ததாகும்; மேலும், அந்தப் பரம்பொருளின் வியக்தித்தன்மை (நபராக செயல்படும் நிலை), அதாவது பகவான் என்னும் நிலை பரமாத்மாவைக் காட்டிலும் உயர்ந்ததாகும். பரம்பொருளின் உயர்ந்த நிலையான பகவானைப் பற்றிய தகவல்களை ஸ்ரீமத் பாகவதம் வழங்குகின்றது. இஃது அருவவாத இலக்கியங்களையும் வேதங்களின் ஞான காண்ட பிரிவையும்விட மேலானதாகும். அதுமட்டுமின்றி, இது கர்ம காண்ட பிரிவைக் காட்டிலும் உயர்ந்தது, உபாஸனா காண்ட பிரிவைக் காட்டிலும் உயர்ந்தது; ஏனெனில், பரம புருஷ பகவானாகிய ஸ்ரீ கிருஷ்ணரின் வழிபாட்டை இது சிபாரிசு செய்கின்றது. கர்ம காண்ட மார்க்கத்தில், உயர்ந்த புலனின்பத்திற்காக மேலுலகங்களை அடைவதில் போட்டி உள்ளது. அத்தகைய போட்டி, ஞான காண்டத்திலும் உபாஸனா காண்டத்திலும்கூட உள்ளது. எல்லாப் பிரிவுகளுக்கும் வேராக, அல்லது கருப்பொருளாக விளங்கும் பரம உண்மையை இலக்காகக் கொண்டிருப்பதால், ஸ்ரீமத் பாகவதம் மற்ற அனைத்தையும்விட உயர்ந்ததாகும். ஸ்ரீமத் பாகவதத்திலிருந்து, ஒருவர் கருப்பொருளை மட்டுமல்லாமல், அதன் பிரிவுகளையும் தெரிந்து கொள்ளலாம். பரம்பொருளான பரம புருஷரே கருப்பொருளாக இருப்பவர், மற்றெல்லா தோற்றங்களும் அவருடன் தொடர்புடைய சக்தியின் வடிவங்களாகும்.

எந்தவொரு வஸ்துவும் கருப்பொருளிலிருந்து வேறானது அல்ல, ஆனால் அதே சமயத்தில், சக்திகள் கருப்பொருளிலிருந்து வேறுபட்டும் உள்ளன. இக்கருத்தில் எந்த முரண்பாடும் கிடையாது. ஒரே சமயத்தில் ஒற்றுமையும் வேற்றுமையும் என்னும் தத்துவத்தினை, வேதாந்த சூத்திரத்தின் ஜன்மாத்யஸ்ய என்னும் சூத்திரத்துடன் தொடங்கும் ஸ்ரீமத் பாகவதம் தெள்ளத்தெளிவாகக் கற்பிக்கின்றது.

பகவானுக்கும் அவரது சக்திக்கும் இடையில் ஒரே சமயத்தில் ஒற்றுமையும் வேற்றுமையும் உள்ளது என்னும் இந்த அறிவு, சக்தியை பரம்பொருளாக நிலைநாட்ட முயற்சி செய்யும் மனக் கற்பனையாளர்களுக்கு ஒரு சிறந்த விடையாகும். இந்த அறிவை உண்மையாகப் புரிந்துகொண்டால், அத்வைத கொள்கை, துவைத கொள்கை ஆகிய இரண்டுமே குறைபாடுடையவை என்பதை ஒருவரால் காண முடியும். ஒரே சமயத்தில் ஒற்றுமையும் வேற்றுமையும் என்னும் இக்கருத்தை அடிப்படையாகக் கொண்டு வளர்க்கப்படும் தெய்வீக உணர்வானது, மூவகைத் துன்பங்களிலிருந்து விடுபட்ட நிலைக்கு ஒருவரை உடனே அழைத்துச் செல்கின்றது. மூவகைத் துன்பங்களாவன: (1) மனதாலும் உடலாலும் விளையும் துன்பங்கள், (2) பிற ஜீவராசிகளால் விளையும் துன்பங்கள், (3) கட்டுப்படுத்த முடியாத இயற்கைச் சீற்றங்களால் விளையும் துன்பங்கள். பூரண புருஷரிடம் பக்தன் சரணாகதி அடைவதிலிருந்து ஸ்ரீமத் பாகவதம் தொடங்குகின்றது. பக்தனொருவன், தான் பகவானுடன் ஒன்றானவன் என்பதையும், அதே சமயத்தில் அவரது நித்தியத் தொண்டன் என்பதையும் நன்கு உணர்ந்துள்ளான். பௌதிக எண்ணத்துடன் வாழ்பவன், காண்பதற்கெல்லாம் தானே எஜமானன் என்று தவறாக எண்ணுவதால், வாழ்வின் மூவகைத் துன்பங்களால் அவன் எப்போதும் கஷ்டத்திற்கு ஆளாகிறான். ஆனால், தெய்வீகத் தொண்டனாக இருப்பதுவே தனது உண்மையான நிலை என்பதை ஒருவன் தெரிந்துகொள்ளும்போது, அவன் உடனடியாக எல்லாத் துன்பங்களிலிருந்தும் விடுபடுகிறான். ஓர் உயிர்வாழி பௌதிக இயற்கையின் எஜமானனாக இருக்க முயலும் வரை, பரமனின் தொண்டனாக ஆவதற்கு வாய்ப்பே இல்லை. பகவானுக்குச் செய்யப்படும் தொண்டு, ஆன்மீக அடையாளத்தின் தூய உணர்வுடன் ஆற்றப்படுகிறது; அத்தகு தொண்டின் மூலமாக ஒருவன் பௌதிக தடங்கல்களிலிருந்து உடனடியாக விடுவிக்கப்படுகிறான்.

இவையனைத்திற்கும் மேலாக, இந்த ஸ்ரீமத் பாகவதமானது, வேதாந்த சூத்திரத்திற்கு ஸ்ரீல வியாசதேவரே சுயமாக அளித்த வியாக்கியானமாகும். இஃது அவரது ஆன்மீக வாழ்வின் பக்குவமான பருவத்தில், நாரதரின் கருணையினால் எழுதப்பட்டதாகும். ஸ்ரீ வியாசதேவர், பரம புருஷரான

நாராயணனின் அங்கீகரிக்கப்பட்ட அவதாரமாவார். எனவே, அவருடைய அதிகாரத் தன்மையைப் பற்றிய கேள்விக்கு இடமேயில்லை. மற்றெல்லா வேத சாஸ்திரங்களுக்கும் அவரே ஆசிரியர் என்றபோதிலும், ஸ்ரீமத் பாகவதத்தைப் படிப்பதை அவர் மற்றெல்லா நூல்களைக் காட்டிலும் உயர்ந்ததாக பரிந்துரை செய்கிறார். மற்ற புராணங்களில், தேவர்களை வழிபடுவதற்கான பல்வேறு முறைகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. ஆனால் பாகவதத்தில், முழுமுதற் கடவுள் மட்டுமே குறிப்பிடப்படுகிறார். முழுமுதற் கடவுள் மொத்த உடலாகவும், தேவர்கள் அவரது உடலின் வெவ்வேறு பகுதிகளாகவும் உள்ளனர். எனவே, முழுமுதற் கடவுளை வழிபடுபவர், தேவர்களை வழிபட வேண்டிய அவசியமில்லை. பக்தனின் இதயத்தில் முழுமுதற் கடவுள் உடனடியாக நிலைபெற்று விடுகின்றார். ஸ்ரீமத் பாகவதம் குறையற்ற புராணம் என்றும், மற்றெல்லா புராணங்களிலிருந்தும் இது வேறுபட்டது என்றும் பகவான் சைதன்ய மஹாபிரபு பரிந்துரை செய்துள்ளார்.

அடக்கத்துடன் கேட்பதே தெய்வீகமான இச்செய்தியைப் பெறுவதற்கான தகுந்த முறையாகும். சவால் விடும் மனப்பான்மை இந்த தெய்வீகச் செய்தியை உணருவதற்கு உதவாது. முறையான வழிகாட்டுதலை வலியுறுத்த, ஷுஷ்ருஷு என்னும் குறிப்பிட்ட சொல் இங்கு உபயோகிக்கப்பட்டுள்ளது. இந்த தெய்வீகச் செய்தியை கேட்பதற்கு ஒருவர் மிகவும் ஆவலுடன் இருக்க வேண்டும். நேர்மையுடன் கேட்க வேண்டும் என்னும் விருப்பமே முதல் தகுதியாகும்.


போதிய அதிர்ஷ்டம் இல்லாத நபர்கள் இந்த ஸ்ரீமத் பாகவதத்தைக் கேட்பதற்கு சிறிதும் ஆர்வம் காட்டுவதில்லை. இவ்வழிமுறை மிகவும் சுலபமானதுதான், ஆனால் இதனை நடைமுறைப்படுத்துவது கடினம். பயனற்ற சமூக மற்றும் அரசியல் சம்பந்தமான உரையாடல்களைக் கேட்பதற்கு துரதிர்ஷ்டம் வாய்ந்த மக்களிடம் நேரம் உள்ளது; ஆனால் ஸ்ரீமத் பாகவதத்தைக் கேட்பதற்காக பக்தர்களின் சத்சங்கத்தில் கலந்து கொள்ளுங்கள் என்று அழைப்பு விடுத்தால் உடனே அவர்கள் தயங்குகின்றனர். சில சமயங்களில் வருமானத்திற்காக பாகவதம் சொல்பவர்கள், எடுத்த மாத்திரத்தில் முழுமுதற் கடவுளின் அந்தரங்க லீலைகளில் நுழைகின்றனர், காம இலக்கியமோ என்று பொருள்படும் வகையில் அதற்கு அர்த்தம் கற்பிக்கின்றனர். ஸ்ரீமத் பாகவதம் ஆரம்பத்திலிருந்து கேட்கப்பட வேண்டியதாகும். "பல்வேறு புண்ணிய செயல்களுக்குப் பின்புதான் ஸ்ரீமத் பாகவதத்தைக் கேட்பதற்கான தகுதியை ஒருவர் அடைய முடியும்," என்று இவ்விலக்கியத்தை கிரகிப்பதற்குத் தகுந்தவர்களைப் பற்றி இச்சுலோகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆழமான பகுத்தறிவுடைய புத்திசாலி மனிதன் ஸ்ரீமத் பாகவதத்தைக் கேட்பதன் மூலம் பரம புருஷரை நேரடியாக உணர முடியும் என்று மாமுனிவரான வியாசதேவர் உறுதியளிக்கின்றார். தன்னுணர்வைப் பெறுவதற்காக வேதங்களில் விதிக்கப்பட்டுள்ள வெவ்வேறு முறைகளை பின்பற்றத் தேவையில்லை; மாறாக, இந்த (ஸ்ரீமத் பாகவதத்தின்) செய்தியை ஏற்றுக்கொள்ள சம்மதிப்பதன் மூலம் ஒருவர் உடனடியாக பரமஹம்ஸரின் நிலைக்கு உயர்த்தப்பட முடியும். (அடுத்த இதழில் தொடரும்).



புருஷோத்தமரான முழுமுதற் கடவுள் ஸ்ரீ கிருஷ்ணர்; ஸ்ரீமத் பாகவதத்தின் கருப்பொருள்

# ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே

# ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே



ஹரே கிருஷ்ண, ஹரே கிருஷ்ண, கிருஷ்ண கிருஷ்ண, ஹரே ஹரே/ ஹரே ராம, ஹரே ராம, ராம ராம, ஹரே ஹரே என்னும் இந்த தெய்வீக ஒலி அதிர்வுகளை உச்சரிப்பது நமது கிருஷ்ண உணர்வை புதுப்பிப்பதற்கான மிகச்சிறந்த வழியாகும். ஆன்மீக ஆத்மாக்களான நாம் உண்மையில் கிருஷ்ண உணர்வுடையவர்களே, ஆனால் நினைவிற்கெட்டாத காலம் தொட்டு ஜடத்துடன் நாம் தொடர்பு கொண்டுள்ளதால், தற்போது நமது உணர்வு பௌதிக சூழ்நிலையினால் களங்கமடைந்துள்ளது. களங்கமுற்ற இவ்வாழ்வில் நாம் அனைவரும் இயற்கையின் வளத்தை சூறையாட முயற்சி செய்து வருகிறோம், ஆனால் உண்மையில் நாம் அனைவரும் மேன்மேலும் சிக்கலில் மாட்டிக் கொண்டுள்ளோம். இந்த அறியாமையே மாயை, அல்லது இயற்கையின் கடும் சட்டத்திற்கு எதிரான வாழ்க்கை போராட்டம் எனப்படும். ஜட இயற்கைக்கு எதிரான இந்த அறியாமையின் போராட்டம், கிருஷ்ண உணர்வை புதுப்பிப்பதன் மூலம் உடனடியாக நிறுத்தப்பட முடியும்.

—தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர்

## இஸ்கான்—ஓர் அறிமுகம்

ஹரே கிருஷ்ண இயக்கம் என்ற பெயரில் உலகெங்கிலும் பிரபலமாக அறியப்படும் அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கம் (இஸ்கான், ISKCON–International Society for Krishna Consciousness) 1966ம் ஆண்டில் தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதரால் தொடங்கப்பட்டு, இன்று உலகெங்கிலும் நூற்றுக்கணக்கான கோவில்களைக் கொண்டுள்ளது. முறையான குரு சீடப் பரம்பரையில் வரும் இந்த இயக்கம், பகவத் கீதை, ஸ்ரீமத் பாகவதம் போன்ற வேத சாஸ்திரங்களின் அடிப்படையில் கிருஷ்ண பக்தியினை மக்கள் மத்தியில் பரப்பி வருகின்றது. கலி யுகத்தில் ஆன்மீகப் பக்குவம் அடைவதற்கு ஹரே கிருஷ்ண, ஹரே கிருஷ்ண, கிருஷ்ண கிருஷ்ண, ஹரே ஹரே/ ஹரே ராம, ஹரே ராம, ராம ராம, ஹரே ஹரே என்னும் மஹாமந்திரத்தினை உச்சரிப்பது மட்டுமே வழி என்று எல்லா வேத சாஸ்திரங்களும் எடுத்துரைக்கின்றன. அந்த ஹரி நாம சங்கீர்த்தனத்தினை ஜாதி, மதம், இனம், மொழி, அந்தஸ்து, கல்வி போன்ற எந்த பேதங்களும் இன்றி மனித குலத்தின் மேன்மைக்காக பரப்பி வரும் இவ்வியக்கம், அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து, பிரான்ஸ், ரஷ்யா, ஜெர்மனி, ஆஸ்திரேலியா, மலேசியா, தென் ஆப்பிரிக்கா உட்பட நூற்றுக் கணக்கான நாடுகளிலும் இந்தியாவின் பல்வேறு நகரங்களிலும் உற்சாகத்துடன் செயல்பட்டு வருகின்றது.

## திருமங்கையாழ்வாரின் பொன் வரிகளில் ஸ்ரீ நரசிம்ம அவதாரம்

பள்ளியில் ஓதி வந்த தன் சிறுவன்
வாயில் ஓராயிரம் நாமம்
ஒள்ளிய ஆகிப் போத, ஆங்கு, அதனுக்கு
ஒன்றும் ஓர் பொறுப்பு இலன்ஆகி,
பிள்ளையைச்சீறிவெகுண்டுதூண் புடைப்ப
பிறை எயிற்று அனல்விழிப் பேழ் வாய்
தெள்ளிய சிங்கம் ஆகிய தேவை
திருவல்லிக்கேணிக் கண்டேனே

கற்பதற்காக பள்ளி சென்ற தனது மகன் பிரகலாதனின் திருவாயில் பகவான் ஸ்ரீஹரியின் ஆயிரம் திருநாமங்கள் எப்போதும் உரைக்கப்படுவதைக் கேட்ட இரணியன், அச்சொற்களைச் சற்றும் பொறுக்க இயலாது, கடும் கோபமுற்று, "உன் ஸ்ரீ ஹரி இத்தூணிலும் உள்ளானோ?" என்று தூணை இடிக்க, பிறை போன்ற பற்களுடன் தழல் சிவந்த கண்களுடன் பெரிய திருவாயுடன் வெளிவந்த அழகிய சிங்கரை திருவல்லிக்கேணியில் கண்டேன்.

—பெரியதிருமொழி, நாலாயிர திவ்ய பிரபந்தம் (1075)

---

## கௌடிய வைஷ்ணவ நாள்காட்டி

### மே

10, திங்கள்—பரம ஏகாதசி விரதம்
மறுநாள் விரதம் முடிக்கும் நேரம் 05:54–06:36

16, ஞாயிறு—அட்சய திரிதியை, 21 நாள் சந்தன யாத்திரை ஆரம்பம்

22, சனி—ஸ்ரீமதி சீதாதேவியின் அவதார தினம்

24, திங்கள்—மோகினி ஏகாதசி விரதம்
மறுநாள் விரதம் முடிக்கும் நேரம் 05:51–07:59



27, வியாழன்—நரசிம்ம சதுர்தசி, பகவான் நரசிம்மர் தோன்றிய நாள் (மாலை வரை விரதம்)
ஸ்ரீ மாதவேந்திர பூரி தோன்றிய நாள்
ஸ்ரீ ஸ்ரீநிவாஸ ஆச்சாரியர் தோன்றிய நாள்

### ஜுன்

2, புதன்—இராமானந்த ராயர் மறைவு நாள்

8, செவ்வாய்—அபர ஏகாதசி விரதம்
மறுநாள் விரதம் முடிக்கும் நேரம் 05:52–10:07

9, புதன்—ஸ்ரீல விருந்தாவனதாஸ் தாகூர் தோன்றிய நாள்

21, திங்கள்—ஸ்ரீ பலதேவ வித்யாபூஷணர் மறைவு நாள்
கங்கா பூஜை
ஸ்ரீமதி கங்காமாதா கோஸ்வாமினி தோன்றிய நாள்

22, செவ்வாய்—பாண்டவ நிர்ஜல ஏகாதசி விரதம்
(மற்ற ஏகாதசிகளில் ஏதேனும் தவறியிருந்தால், இந்த ஏகாதசியை தண்ணீர்கூட அருந்தாமல் பின்பற்ற வேண்டும்)
மறுநாள் விரதம் முடிக்கும் நேரம் 05:54–10:09

24, வியாழன்—பானிஹாட்டி சிடா ததி உற்சவம்

26, சனி—பூரி ஸ்ரீ ஜகந்நாதர் ஸ்நான யாத்திரை
ஸ்ரீ முகுந்த தத்தர், ஸ்ரீதர பண்டிதர் மறைவு நாள்

27, ஞாயிறு—ஸ்ரீ சியாமனந்த பிரபு மறைவு நாள்

(தமிழகத்தின் மையப் பகுதியான திருச்சியை அடிப்படையாக வைத்து கணக்கிடப்பட்டுள்ளது, ஏகாதசி விரதத்தை முடிப்பதற் கான நேரம் மற்ற இடங்களில் சற்று வேறுபடும்.)

# தமிழகத்திலுள்ள இஸ்கான் கோவில்களின் முகவரிகள்

**ஒசூர்**—இராமர் கோவில் வளாகம், நேதாஜி ரோடு, ஒசூர் - 635019. போன்: (04344) 226222. இ-மெயில்: iskcon_hosur@rediffmail.com

**கும்பகோணம்**—56/49, சௌராஷ்டிரா பெரிய தெரு, கும்பகோணம் - 612001. போன்: 99949 49108. இ-மெயில்: vanamali.gopal.jps@pamho.net

**கோயமுத்தூர்**—ஸ்ரீ ஜகன்னாதர் கோயில், ஹரே கிருஷ்ண நிலம், 100 அடி நியூ ஸ்கீம் ரோடு, CIT கல்லூரி எதிர்புறம், கோயமுத்தூர் - 641014. போன்: (0422) 2626508/9. இ-மெயில்: bhakti.vinoda.swami@pamho.net www.iskcon-coimbatore.org

**சென்னை**—ஹரே கிருஷ்ண நிலம், பக்திவேதாந்த ஸ்வாமி சாலை, கிழக்குக் கடற்கரைச் சாலை, சோழிங்கநல்லூர் அஞ்சல், அக்கரை, சென்னை - 600041. போன்: (044) 24530920/21/22/23, 24343266, 32911472 இ-மெயில்: iskconchennai@pamho.net www.iskconchennai.com

அலுவலக முகவரி: புது எண் 23, முதல் மெயின் ரோடு, கே.பி. நகர், அடையார், சென்னை - 600020. போன்: (044) 24456199. இ-மெயில்: iskconoffice@gmail.com

**சேலம்**—ஹரே கிருஷ்ண நிலம், கருப்பூர், சேலம் - 636012. போன்: (0427) 2001686, 2345545, 94421 53427. இ-மெயில்: iskcon.salem@pamho.net www.iskconsalem.com

**திருநெல்வேலி**—10B, திருவனந்தபுரம் ரோடு, வண்ணாரப் பேட்டை ரவுண்டானா அருகில், திருநெல்வேலி - 627002. போன்: (0462) 2501640. இ-மெயில்: iskcon.tirunelveli@pamho.net

**நாகர்கோயில்**—418, KP ரோடு, நாகர்கோயில் - 629002. போன்: 98946 00108. இ-மெயில்: iskcon.kanyakumari@gmail.com

**மதுரை**—12/37. மணிநகரம் மெயின் ரோடு, மதுரை - 625001. போன்: (0452) 2346472. இ-மெயில்: iskcon.madurai@pamho.net

**வேலூர்**—10/12, 10வது கிழக்குக் குறுக்குத் தெரு, காந்திநகர், வேலூர் - 632006. போன்: (0416) 2241654, 94429 53417. இ-மெயில்: akincan_bvks97@rediffmail.com

**ஸ்ரீரங்கம், திருச்சி**—ஹரே கிருஷ்ண நிலம், 107, அம்மா மண்டபம் ரோடு, ஸ்ரீரங்கம், திருச்சி - 620006. போன்: 99442 05875. இ-மெயில்: rukmiha.jps@pamho.net

**பாண்டிச்சேரி**—41, 8வது குறுக்குச் சாலை, முதல் தளம், ரெயின்போ நகர், பாண்டிச்சேரி - 605011. போன்: 94434 68923, 99408 64086. இ-மெயில்: sarvananda2003@yahoo.com

## சிறிய (நாமஹட்டா) மையங்கள்

**தேன்கனிக்கோட்டை**—கிருஷ்ண பலராமர் ஆலயம், ஹரே கிருஷ்ண ரோடு, அன்செட்டி மெயின் ரோடு, தேன்கனிக்கோட்டை. போன்: 93623 10556. இ-மெயில்: adgd.jps@gmail.com

**நாமக்கல்**—இஸ்கான் நாமஹட்டா மையம், ஸ்ரீ செல்வம் பிளாசா மாடியில், நரசிம்மர் கோவில் எதிரில், கோட்டை, நாமக்கல் - 637001. போன்: 94421 53427, 97885 84802.

**பெரம்பூர், சென்னை**—7C, வாசன் தெரு, பெரம்பூர், சென்னை - 600011. போன்: 98400 87067. இ-மெயில்: jai.gopinath.jps@pamho.net


**நெய்வேலி**—E53, அண்ணா சாலை, பிளாக்-26, நெய்வேலி - 607803. போன்: 98945 30533.

**தர்மபுரி**—180, பை-பாஸ் ரோடு, அரசு மருத்துவமனை அருகில், சேலம் மெயின் ரோடு, தர்மபுரி. போன்: 97886 16028.

இவை தவிர மேலும் பல்வேறு இடங்களில் சிறிய அளவில் நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. மேலும் விவரங்களுக்கு தங்களுக்கு அருகிலுள்ள முக்கிய மையங்களைத் தொடர்பு கொள்ளவும்.

இந்தியாவின் இதர இடங்களில் உள்ள மையங்களின் முகவரியையும் உலகளாவிய மையங்களின் முகவரியையும் அறிய, தங்களுக்கு அருகிலுள்ள இஸ்கான் மையங்களை அணுகவும். அல்லது www.krsna.com என்ற இணைய தளத்தில் காணவும்.




# ஸ்ரீ கிருஷ்ண தரிசனம்

65 ஆண்டு கால பாரம்பரியமிக்க
Back to Godhead
பத்திரிகையின் தமிழ் பதிப்பு, தற்போது
**உங்களின் வீடுதேடி!**

ஸ்ரீ கிருஷ்ணரின் நாமம், ரூபம், குணம், லீலை, போன்றவற்றைப் பற்றிக் கேட்பதே ஸ்ரீ கிருஷ்ணரின் தரிசனத்தைப் பெறுவதற்கான வழிமுறையாகும். இந்த வழிமுறையினை அறியாத முட்டாள்கள், நிரந்தரமற்ற பொருள்கள், விஷயங்கள், மற்றும் நபர்களைப் பற்றிக் கேட்பதில் ஆவலாக உள்ளனர். கேட்பதில் இருக்கும் ஆர்வத்தை நல்லபடியாக எவ்வாறு உபயோகிப்பது என்பதை அறியாமல் உள்ளனர்.

—தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர் அருளிய
ஸ்ரீமத் பாகவத உரையிலிருந்து (2.1.2)

ஸ்ரீ கிருஷ்ண தரிசனம் மாதந்தோறும் உங்கள் வீடுதேடி வர, சந்தாதாரராக மாறுங்கள்.

ஒரு வருட சந்தா: ரூ.160
இரு வருட சந்தா: ரூ.300
ஐந்து வருட சந்தா: ரூ.700

மேலும் விபரங்களுக்கு, உள்பக்கங்களை பார்க்கவும்.

**ஸ்ரீ கிருஷ்ண தரிசனம் படியுங்கள்! ஸ்ரீ கிருஷ்ணரின் தரிசனத்தை அடையுங்கள்!**




K.V. Narayanan

99400 47587



# K.V.N. REALTY

Buying ෂ Selling ෂ Rental

Old #26, New #42, Devaraja Mudali Street,

2nd Floor, Park Town, Chennai - 600 003.